கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

MADRAS

செய்திகள்

ஆதாரக் கல்வி

தற்போது 5 வயது முதல் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி போதிக்கப்படுகிறது. ஏழு வயதுக்குப் பிறகு ஆதாரக் கல்வி போதிப் பதை ஆரம்பிக்கலாம் என்று ஆசார்ய வினோபா பவே கூறுகிறார். நகரங்களில் படிக்கும் குழந்தைகளைப் பூங்காவுக்கு அழைத்துச் சென்று சரீர வேலை செய்யப் பழக்கவேண்டும். கிராமங்களில் உள்ள பள்ளி களில் ஷிப்டு முறையை ஏற்படுத்தலாம். பள்ளிகளே இல்லாத இட களில் $2\frac{1}{2}$ மணி நேரக் கல்வி போதும். விவசாயம், தோட்டத் தொழி ஓரளவு சமையல் வேலை இவற்றையும் ஆதாரக் கல்வித் திட்டத்தி சேர்க்கலாம். இவ்வாறு அவர் ஆரம்பக் கல்விக் கமிட்டி முன் சாட்சியம் கொடுத்திருக்கிறார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு 3750 கோடி ரூபா வரை செலவாகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். சுமார் 100 மு 120 லட்சம் பேர்களுக்கு இந்தத் திட்டத்தின்படி வேலை கிடைக்கும் செய்வதும் தேசிய வருமானத்தை ஆண்டுக்கு 5 சதவிகித உயரும்படி செய்வதும் இந்தத் திட்டத்தின் லட்சியம். இந்திய இந்தப் பத்து ஆண்டுகளில் கணிசமான அளவுக்கு முன்னேறிவிடும்.

தசாம்ச முறையில் நாணயச் செலாவணி

இப்போதுள்ள நாணய முறையைத் தசாம்ச முறையில் இந்திய சர்க்கார் எண்ணியிருக்கிறார்கள். ரூபாயைப் அணாவாகப் பிரிப்பதற்குப் பதிலாக 100 செண்டுகளாகப் பிரி வேண்டியிருக்கும். ரூபாய்க்குக் கீழ்ப்பட்ட நாணயங்கள் கணக்கிலேயே வெளியிடப்படும். அரை ரூபாய்க்கு 50 செ கால் ரூபாய்க்கு 25 செண்டுகள் என்று பிரிப்பார்கள். மற்றவை இதே தோரணையில் நிர்ணயிக்கப்படும். இந்த மாறுதல் சட் பிறகு அமலுக்கு வரும்.

புதிய கல்லூரிகள்

தஞ்சை ஜில்லாவில் இந்த வருஷம் இரண்டு புதிய கல் ஆரம்பமாகும். ஒன்று தஞ்சையிலும் மற்றொன்று மாயவர திறக்கப்படும். இதற்குச் சர்க்காரும் சர்வகலாசாலையினரும் கொடுத்திருக்கின்றனர்.

ஆசிய, ஆப்ரிக்க நாடுகள் மாநாடு

1949-ஆம் வருஷம் புது டில்லியில் ஆசிய ஆப்ரிக்க நாடுக கூடின. அதுவே இப்போது இந்தோனேசியாவில் கூடிய இந்த நாட்டுக்கு வித்திட்டது. இதில் 29-ஆசிய ஆப்ரிக்க நாடுகள் கொண்டன. உலக ஜனத் தொகையில் பெரும் பகுதியைக் டவை ஆசியாவும் ஆப்ரிக்காவும். மனித குலத்தின் உயரிய லட்சியங் அடைவதும், அவற்றை அபிவிருத்தி செய்வதுமே இந்த மகாநாட் நோக்கம். இந்தோனேசிய ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோ இந்த நாட்டைத் துவக்கி வைத்தார்.

திருச்சி ஜங்ஷன்

தென் ரெயில்வேயில் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டுள்ள ந என்று திருச்சி ஜங்ஷனுக்கு வெள்ளிக்கோப்பை பரிசளிக்கப்பட்டு

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 6 இதழ்: 10

15 - 5 - '55

குழந்தைகளே! பக்கம்	2
குண்டுச் சீமா ..	3
பாலர் கவியரங்கம் ..	9
கேளுங்கள், சொல்கிறேன்	10
பகைவனுக்கு அருள்வாய்	13
பச்சைக் கல் ..	17
பிறந்த இடமும்.. ..	22
மூன்று குருடர்கள் ..	26
அருமையான சம்பவம் ..	28
மின்சார ஹார்ன் ..	29
எங்கள் பகுதி ..	31
பாரஸீக ரோஜா ..	33
வேதாந்தி ..	35
லீடர் மணி ..	37

செய்திகள் - 2 - அட்டை

அதிருஷ்ட எண்கள்-3-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

24

15 - 4 - 55

அதிருஷ்ட எண்கள்

முதற் பரிசு		..	3588
2-ஆம் பரிசு		..	12134
3-ஆம் பரிசு	1.	..	7294
	2.	..	10658
	3.	..	2035
4-ஆம் பரிசு	1.	..	2701
	2.	..	50
	3.	..	12269
	4.	..	8871
	5.	..	3561

MADRAS 1955 31217

ஏப்ரல் 15-ஆம் தேதி வெளியான எல்லாக் கண்ணன் இதழிலும் எண்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில், மேலே வெளியாகியுள்ள இந்த எண்கள் எல்லாம் அதிருஷ்ட எண்கள். இந்த எண்கள் உள்ள கண்ணன் யார் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் உடனே எங்களுக்கு அதை அனுப்பி அதற்குரிய பரிசைப் பெற்றுக் கொள்ளலாம்.

கண்ணனை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவது நலம்.

பரிசு பெற்றவரின் முழு விலாசம், வயது, படிக்கும் வகுப்பு, பள்ளிக்கூடம் இவற்றையும் தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும். தொடர்கதைகளைத் தவிர மற்றப் பகுதிகளும் அட்டையும் அப்படியே கிழியாமல் அனுப்ப வேண்டும். ஜூன் மாதம் 1-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எங்களுக்கு அனுப்பவேண்டும். அதற்கு மேல் அனுப்பினால், பரிசுத் தொகைக்கு உரியதாகாது.

—ஆசிரியர்.

குழந்தைகளே!

உங்களுக்கு விடுமுறை என்ருலே எனக்குக் கொஞ்சம் யோசனைதான். உங்களுடைய கைவரிசைகளை யெல்லாம் காட்டி என்னைத் திணற அடித்துவிடுகிறீர்கள். என் மேஜையை வந்து பார்த்தால்தான் உங்களுக்கு இது புரியும். தபால்கள் ஒரு சிறு குன்றுபோல் குவிந்திருக்கும்; கதைகள் கட்டுரைகள் இரண்டும் இரண்டு மலைகள் எனக் குவிந்திருக்கும். எங்கள் பகுதி, கேளுங்கள் சொல்கிறேன், பாலர் கவியரங்கம் ஆகிய பகுதிகளுக்கு வரும் விஷயங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைபோல் வரிசையாகக் குவிந்திருக்கும். இதற்கு நடுவிலே அகப்பட்டுக்கொண்டு நான் மூச்சுத் திணறுகிறேன்.

இதிலே இது நல்ல கோடைகாலமா? வெப்பம் வேறு தாங்க முடியவில்லை. மூளையே உருகிவிடும்போல இருக்கிறது. ஆனால் அப்படியெல்லாம் இருந்தும் எனக்கு ஆபத்து ஒன்றும் நேர்வதில்லை. ஏன் தெரியுமா? நல்ல கோடையின்போது எல்லாரும் எங்கே போக விரும்புவார்கள்? மலைவாசஸ்தலங்களுக்குக் குளிர்ச்சியை வேண்டிப் போவார்கள். இல்லையா? ஆனால் இங்கே என்னைத் தேடிக்கொண்டு மலைகளே வருகின்றனவே. எனக்கு என்ன குறை? ஜிலுஜிலு என்று உங்கள் கற்பனைத் திறம் என்ற தென்றலை ஆனந்தமாய் அநுபவிக்கிறேன். எத்தனையோ இயற்கைக் காட்சிகளை யெல்லாம் இருந்த இடத்திலிருந்தே பார்த்துக் களிக்கிறேன். பரவசப்படுகிறேன். எத்தனை அருமையான விருந்து கிடைக்கிறது! பற்பல வகையான விருந்து: பற்பல வகையான ருசி! ஐஸ் கிரீம் - மல்கோவா மாம்பழம் - கோதுமை அல்வா - கரம் பக்கவடா, விஜடபிள் சோமாஸ், போண்டா எல்லாம்தான்! சிலர் அழகாய் இருக்கிறதே என்று வேப்பம்பழத்தைக்கூடக் குலையோடு அனுப்பிவிடுகிருர்கள்! ஆனால் நான் ஏமாந்தாலும் என் மூக்கு ஏமாறுமா? அழகாக இருப்பதெல்லாம் இனிப்பாகவும் இருந்துவிடுமா? நைஸாக எடுத்துக் கிடப்பிலே போட்டு விடுவேன்.

தொடர்கதைப் போட்டிக்குப் பலர் எழுத முன் வந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். பல பெண்களும் எழுதப் போவதைக் கேட்டு இன்னும் மகிழ்ச்சி.

இந்த இதழில் குண்டுச் சீமா தரிசனம் கொடுக்கத் தொடங்கியிருக்கிருன். படித்துப் பாருங்கள். போகப் போக அவனை விட்டுப் பிரியவே உங்களுக்கு மனசு வராது. அத்தனை இனிய நண்பனுகி விடுவான் அவன். லீடர் மணி ஒரு புதிய கட்டத்தை நெருங்குகிருன். இனிமேல்தான் இருக்கிறது அவனுடைய வேகமும் விறுவிறுப்பும். மற்றப் பகுதிகளும் கதைகளும் உங்களை மகிழ்விக்கும் என்றே நம்புகிறேன்.

நாளுக்கு நாள் கண்ணன் சிறப்பாக வளர்ந்து வருகிருன். அந்தச் சிறப்புக்கு உங்களுடைய உற்சாகம்தான் காரணம். அந்த உற்சாகம் வானளாவிய ஆல மரத்தைப்போல, விழுது விட்டுத் தழைக்கட்டும். உங்கள் கண்ணனில் இன்னும் பலபல புதுமைகளை நீங்கள் தாராளமாக எதிர்பார்க்கலாம். புதுமையும் முன்னேற்றமுமே கண்ணனுடைய லட்சியம்.

அதிருஷ்ட எண்களைப்பற்றி இன்னும் சிலருக்குப் புரியவில்லை. எல்லாக் கண்ணன் இதழிலும் 3-ஆவது அட்டையில் ஓர் எண் அச்சிடப் பட்டுள்ளது. இது 15-5-55 இதழ். இந்த எண்களில் அதிருஷ்ட எண்கள் அடுத்து 1-6-55 இதழில் வெளியாகும். இந்த இதழில் பொருளடக்கத்திற்குப் பக்கத்தில் 15-4-55 இல் வெளியான கண்ணனுக்கு அதிருஷ்ட எண்கள் வெளியாகி யிருக்கின்றன. இந்த எண்கள் உள்ள 15-4-55 கண்ணன் வைத்திருப்பவர்கள் உடனே அனுப்பவேண்டும். சிலர் இது தெரியாமல் வாங்கின உடனேயே அனுப்பிவிடுகிருர்கள்.

— ஆசிரியர்.

21797

குண்டுச் சீமா

ராஜி

1

என்னுடைய முழுப் பெயர் ஸ்ரீநிவாஸன். இந்தப் பெயரைச் சொல்லித்தான் என் பாட்டி நான் பிறந்த பத்தாவது நாள் என்னை அழைத்தாள். என் அம்மாவுக்கு என்னை வேறு பெயரிட்டு அழைக்க வேண்டும் என்ற விருப்பம். என் அப்பாவும் தாத்தாவும் கூட என்னை வேறு பெயரிட்டுக் கூப்பிடவேண்டும் என்று நினைத்தார்களாம். என் உறவினர்களும் மற்றவர்களும்கூட என்னைத் தற்கால நாகரிகப்படி குமார், பிரபாகர், சங்கர், ரவி, மங்கேஷ், பிரஸாத் என்று பெயரிட்டு அழைக்கவேண்டும் என்று விருப்பப்பட்டார்கள். ஆனால் என் பாட்டி, ''நன்னா இருக்கு! நானிருக்கிற வரையிலும் கன்னாபின்னான்னு பேர் வைக்கவிடமாட்டேன். அதுவும் திருப்பதி வெங்கடாசலபதி அருளினால் பிறந்த குழந்தை அவன். அவனுக்கு ஸ்ரீநிவாஸன் என்று பெயரிட்டுத்தான் அழைப்பேன்'' என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள். அதுவும் என் வீட்டில் பாட்டி என்றால் எல்லாருக்கும் பயம். தாத்தாவுக்கும் பயந்தான். பாட்டி ஸ்ரீநிவாஸன் என்று பெயரிட்டிருந்தாலும் என் வாழ்க்கையிலே எனக்கு வேறு பல பெயர்கள ஏற்படலாயின.

'சீனு' என்பது ஒரு பெயர். இந்தப் பெயரைச் சொல்லித்தான் என் தகப்பனார் என்னைக் கூப்பிடுவார். சீமாச்சு என்ற செல்லப் பெயரில் என் தாயார் அடிக்கடி என்னை அழைப்பாள். சில சமயத்தில், ''ஏ பறட்டை! இங்கே வா'' என்று என் தாயார் என்னைக் கூப்பிடுவது உண்டு. பறட்டை என்று என் அம்மா என்னைக் கூப்பிட்டால் நான் தலை பின்னிக் கொள்வதற்கு அம்மாவிடம் போக வேண்டும் என்று அர்த்தம். என் தலையை எப்படி வாரினாலும் பறட்டையாகவே இருந்ததனால் அந்தப் பெயர் எனக்கு உண்டாயிற்று.

நான் பிறக்கும்பொழுதே குண்டுக் கொழுக்கட்டை மாதிரிதான் பிறந்தேனாம். மற்றக் குழந்தைகளைப்போல் பிறக்கும்பொழுது குண்டாகப் பிறந்துவிட்டு பிறகு ஒணான் கொடி மாதிரி நான் ஆகவில்லை. அதனால்தான் எனக்குக் குண்டு என்ற பெயர் வெகுநாள் வரையிலும் நிலைத்துவிட்டது. ஆனால் என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தபொழுது எஸ். ஸ்ரீநிவாஸன் என்றுதான் என் பெயரைப் பதிவு செய்திருந்தார்கள். ஆனால் அங்கே கூட எனக்குப் போட்டியாக என் வகுப்பில் மற்றொரு ஸ்ரீநிவாஸன் நான் சேருவதற்கு முன்னேயே இருந்தான். அவனைப் பள்ளிக்கூடச் சிநேகிதர்கள் சீமாவென்று அழைத்துக்கொண்டிருந்தார்கள். நான் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தவுடன் நான் பருமனாக இருந்ததனால்

என் தாத்தா

என்னையும் அந்தப் பழைய சீமாவையும் தனித் தனியாகத் தெரிந்து கொள்வதற்காக என் வாத்தியார் என்னைக் 'குண்டுச் சீமா' என்று வகுப்பில் கூப்பிட ஆரம்பித்தார். அப்புறம் அதுவே நிலைத்துப் போய் விட்டது.

ஒரு நாள் காலை என் சிநேகிதன் ஒருவன் என்னைக் கூப்பிடுவதற்காக என் வீட்டுக்கு வந்தான். அவனுடைய நோட்டுப் புஸ்தகம் ஒன்றை நான் கொண்டுவந்திருந்தேன். என் பாட்டி வாசற் பக்கம் ஜபம் பண்ணியபடி உட்கார்ந்திருந்தாள். வந்த என் சிநேகிதனைக் கண்டதும், ''யாருடா பையா நீ, எங்கே வந்தே?'' என்று கேட்டாள்.

என் அப்பா

''பாட்டி, என் நோட் புக் ஒண்ணு குண்டுச் சீமாவிடம் இருக்கு. அதை வாங்கிண்டு போக வந்தேன்'' என்றான் அவன்.

''இந்த வீடு இல்லை, அப்பா. பக்கத்து வீட்டிலே போய் விசாரி'' என்று சொல்லிவிட்டாள் பாட்டி.

என் சிநேகிதன் பயந்த சுபாவம் படைத்தவன். சற்றுத் தயங்கினான். அப்பொழுது என் அம்மா வாசற் பக்கம் வந்தாள். ''பையா; யாரப்பா நீ? ஏன் இங்கே நிக்கிறே?'' என்று கேட்டாள்.

''மாமி! என் நோட் புக் குண்டுச் சீமாவிடம் இருக்கு. அதை வாங்கிண்டு போக வந்தேன்'' என்று தாழ்ந்த குரலில் சொன்னான் என் சிநேகிதன்.

''குண்டுச் சீமாவா? அது யாருடா அது?'' என்று என் தாயார் சற்றுக் கோபமாகவே கேட்டாள்.

''உங்க வீட்டுப் பையன்தான் மாமி!''

''எங்க வீட்டுப் பையனு? சீமாவையா சொல்றே?''

''ஆமாம், மாமி.''

''ஆமானு? எங்க சீமாவையா குண்டுச் சீமான்னு சொல்றே?''

'ஆமாம்' என்பதுபோலத் தலையை அசைத்தான் அவன்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த பாட்டி கோபத்துடன் எழுந்தாள்.

''ஆமானு? யாருடா குண்டு? யாரைப் பார்த்துடா அப்படிச் சொல்றே? ஏ, போக்கிரிப் பயலே!'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே வெளியில் எங்கேயோ போயிருந்த என் தாத்தாவும் தடியை ஊன்றிக் கொண்டு திரும்பி வந்தார். வந்தவர் என் சிநேகிதன் பயந்து நின்றுகொண்டிருப்பதையும் என் தாயாரும் பாட்டியும் அவனைப் பார்த்து ஏதோ சொல்லிக்கொண்டிருப்பதையும் கவனித்தார்.

''நீ யாருடா பையா?'' என்று விசாரித்தார்.

''உங்க வீட்டுக் குண்டுச் சீமாவிடம் என் நோட் புக் இருக்கிறது, தாத்தா. அதைத் திருப்பி வாங்கிண்டு போக வந்தேன்'' என்றான் அந்தப் பையன் மறுபடியும்.

"பார்த்தேளோ இல்லையோ, நம்ம சீமாவை அப்படிக் குண்டுச் சீமான்னு கூப்பிடுகிறது இந்த வாண்டு. இதுக்கு என்ன திமிரு? இவன் சாதம் போட்டு வளர்த்தானா?" என்று ஒரே சமயத்தில் என் பாட்டியும் அம்மாவும் என் தாத்தாவைப் பார்த்துச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

"அட திமிர் பிடித்தவனே. எங்க சீமாவையா அப்படிக் கூப்பிடறே? உனக்கு என்ன கர்வம்? குழந்தை உடம்பு இளைச்சுண்டு வராப்பலே இருக்கு என்று கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறேன். அவனைப் புதிசா பேர் வைத்துக் கூப்பிடுகிறாயே. யாரையடா குண்டுங்கறே?" என்று கையிலிருந்த தடியை ஓங்கிக்கொண்டு நெருங்கினார் என் தாத்தா.

"தாத்தா! கோவிச்சுக்காதீங்கோ. பள்ளிக்கூடத்திலே நாங்க எல்லோரும் அவனை அப்படித்தான் கூப்பிடுவது வழக்கம்" என்றான் என் சிநேகிதன்.

"நீ மாத்திரம் இல்லை. எல்லாப் பையன்களுமா எங்க சீமாவை அப்படிக் கூப்பிடறேள்? உன்னை இப்போ என்ன பண்றேன் பாரு!" என்று தடியைத் தூக்கி ஓங்கினார் தாத்தா.

"அவனை லேசில் விடாதிங்கோ! என்ன தைரியம் அவனுக்கு, குழந்தையைப் பார்த்து அப்படிச் சொல்ல! அவன் முழியைப் பிடுங்க! குழந்தை சீமாவுக்கு என்ன உடம்பு வரப்போகிறதோ? அடி, லக்ஷ்மி! குழந்தைக்கு உடனே திருஷ்டி சுத்திக் கொட்டுடி" என்று என் அம்மாவைப் பார்த்து அங்கலாய்த்தாள் பாட்டி. "குண்டுச் சீமா என்று சொன்ன அந்த நாக்கை அறுக்கணும்" என்று கத்தினாள் என் அம்மா.

"நம்ம சீமாவைப் பார்த்தா குண்டுச் சீமா என்றான்? அந்தப் பையனுக்கு என்ன கொழுப்பு?" என்று சொல்லிக்கொண்டே என் தந்தை உள்ளே இருந்து வந்துவிட்டார். ஒரே சமயத்தில் சீமாவின் வீட்டிலிருப்பவர்கள் எதிர்பாராமல் தன்னைக் கடிந்து பேச ஆரம்பித்தவுடன் என் சிநேகிதனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. திரு திருவென்று விழித்துக்கொண்டிருந்தான். என் தாத்தா தடியால் அவனை அடிக்கும் பாவனையாக நெருங்கினார். என் சிநேகிதன் எங்கே தன்மீது அடி விழப் போகிறதோ என்று பயந்து வாசற்படியிலிருந்து கீழிறங்கினான். தடியுடன் தாத்தாவும் இறங்கினார். சிநேகிதன் மெல்ல நகர்ந்தான். என் தாத்தா சற்று வேகமாக நடந்தார். சிநேகிதன் மெதுவாக ஓட ஆரம்பித்தான். என் தாத்தாவும் அவனைப் பின்பற்றினார். தள்ளாமல் தாத்தா ஓடுவதைக் கண்ட என் தகப்பனார் தாத்தாவிடமிருந்து தடியைப் பிடுங்கிக்

என் பாட்டி

என் அம்மா

கொண்டு என் சிநேகிதனை விரட்ட ஆரம்பித்தார்.

என் சிநேகிதன் ஓடுவதை மாடியில் படித்துக்கொண்டிருந்த நான் கவனித்தேன். 'அடாடா இவன் எதற்காக இப்படி ஓடுகிறான்? இப்படி ஏன் தடியுடன் அப்பா இவனைத் துரத்துகிறார்?' என்று வேகமாகக் கீழே வந்தேன்.

''பாட்டி, எதற்காக அப்பா என் சிநேகிதனைத் துரத்திண்டு ஓடறா? அவன் இங்கே வந்தானா?'' என்றேன்.

''வந்தானா? இங்கே வந்து குண்டுச் சீமா இருக்கானா இன்னு கேட்டான் வாண்டுப்பய. அவனுக்கு என்ன திமிரு? நான் இமையிலே வச்சுண்டு காக்கறாப்பலே உன்னை வளக்கிறேன். நீ என்ன அவ்வளவு குண்டாவா



இருக்கே? அப்படியே நீ இருந்தா லும் என் குழந்தையைக் குண் டுன்னு கூப்பிட அவன் யாருடா, நேத்துபய!'' என்ருள் பாட்டி. உடனே என் அம்மா, ''அவன் இங்கே மறுபடியும் தலையைக் காட் டட்டும்; அவனை என்ன பண்ணுகி றேன் பார்'' என்று கோபமாகச் சொல்லி, பாட்டியின் கோபத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாள்.

''என்ன பாட்டி, பாவம் அவன் ரொம்ப நல்லவன் பாட்டீ!''

''என்னடா அவன் நல்லவன்? உன்னை குண்டுச் சீமான்னு கூப்பிட ருன். அவனு நல்லவன்!''

''கூப்பிட்டா என்ன பாட்டி? அந்தப் பேரைச் சொல்லித்தான் எங்க வாத்தியாரே என்னைக் கூப் பிடுவார். பள்ளிக்கூடப் பையன் களும் கூப்பிடுவா. வைத்தியும் கூப் பிட்டான். எங்க பள்ளிக்கூடத் திலே ஒவ்வொரு பையனுக்கும் ஒவ்வொரு பெயர்தான் இருக்கும். என் வாத்தியாருக்குகூட பேர் வைத்து கூப்பிடுவது வழக்கம்.''

''நன்னருக்குடா நீ சொல்றது. வாத்தியாருக்குமா பேர் வைத்துப் பையன்கள் கூப்பிடுவா? பள்ளிக் கூடம் உருப்பட்டால் போலே தான் போ!'' என்ருள் பாட்டி.

அந்தச் சமயத்தில் வெளியே சென்றிருந்த என் தகப்பனர் திரும்பிவந்தார். நான் சொல்லு வதைக் கேட்டுவிட்டு, ''சீமா, நேத் திக்கு உங்க பள்ளிக்கூடத்து வழி யாக வரபொழுது இரண்டு மூன்று பசங்கள் சேர்ந்து, 'அதோ சுண் டைக்காய் கையிலே பிரம்பெடுத் துண்டு போருர்டா!' என்று சொல் லிக்கொண் டிருந்தார்கள். 'என் னடா இது, சுண்டைக்காய்க்கு இவ் வளவு மரியாதை' என்று பார்த் தேன். அப்பொழுது தலைப் பாகையை அணிந்துகொண்டு கை யில் பிரம்புடன் உபாத்தியாயர் மாதிரி ஒருவர் சென்றுகொண் டிருந்தார். பையன்கள் அவரைப் பற்றித்தான் சொல்லிருக்க வேண்டு மென்று நினைத்தேன்!'' என்ருர்.

''ஆமாம் அப்பா, அவரேதான். அவர் எங்களது ஹைஜின் வாத்தி யார். அடிக்கடி 'சுண்டைக்காய் மிகவும் சத்துள்ளது' என்று சொல் லிக்கொண்டே இருப்பார். அத ஞலே எல்லாப் பையன்களும் அவ ருக்குச் 'சுண்டைக்காய்' என்று பெய ரிட்டிருக்கிருர்கள். வாசல்லே யாராவது சுண்டைக்காய் வத்தல் என்று விற்ருல்கூட அவர் தம்மைப் பையன்கள் யாராவது பரிகாசமாக கூப்பிடுகிருர்களோ என்று எட்டிப்

செல்வி மீரா

செல்வி மீராவின் பரத நாட்டிய அரங்கேற்றம், சென்னை ஹிந்தி பிரசார சபையில் 16-4-55 இல் நடைபெற்றது. சிறிய வயசில் மிகத் திறமையாக ஆடிக் காட்டிய செல்வி மீராவையும், பயிற்சி அளித்த ஸ்ரீமதி நீலா பாலசுப்பிரமணியம் அவர்களையும் விழாவிற்குத் தலைமை தாங்கிய புரொபஸர் ஸ்ரீ சாம்பமூர்த்தி அவர்கள் வெகுவாகப் பாராட்டினார். செல்வி மீரா பிரபல எழுத்தாளர் ஸ்ரீ ரா. அ. பத்மநாபன் அவர்களின் குமாரி; கண்ணன் கழக அங்கத்தினர்.

பார்ப்பாராம். எங்க பள்ளிக்கூடத்து வாத்தியார் ஒருவருக்குப் பேர் 'ஆந்தை.' அவர் ஒவ்வொரு செய்யுளையும் பல கையில் எழுதிப்போட்டு முடிந்த உடன் 'புரிகிறதா?' என்று மூக்குக் கண்ணாடியை முகத்திலிருந்து எடுத்துவிட்டுப் பையன்களைப் பார்த்து விழிப்பார். அப்பொழுது அவரது விழிகள் ஆந்தையின் விழிகளைப்போல இருக்குமாம். அதனாலே அவருக்கு அந்தப் பெயர். ஒரு வாத்தியாருக்குப் பெயர் குள்ளவாத்து. அவர் பார்ப்பதற்குக் கொஞ்சம் குள்ளமாக இருப்பார். கால்களைக் கொஞ்சம் அகட்டி அகட்டி வைத்து நடப்பார். அவர் காதில் படும்படி வாத்து கத்துவதுபோல, 'குவேக் குவேக் குவேக்' என்று கத்துவார்கள். பையன்களுக்கும் கணக்கற்ற பெயர்கள். என்னையும் பள்ளிக்கூடத்தில் எப்படிக் கூப்பிடுகிறார்கள் என்று நீங்களெல்லாரும் இப்பொழுது தெரிந்து கொண்டீர்கள்'' என்று நான் சொல்லி முடிப்பதற்குள் என் வீட்டை நோக்கி ஒரு கும்பலாகச் சில பையன்கள் நெருங்கிக்கொண்டிருந்தார்கள். முதலில் பார்ப்பதற்கு அது சிறிய கும்பலாகத் தோன்றிற்று. பிறகு பெரிய கும்பலாகத் தென்பட்டது.

அந்தக் கும்பலைப் பார்த்த நான், ''அடே அடே! வைத்தி, ராமு, ஆறுமுகம், பாலு மற்றும் என் வகுப்புச் சிநேகிதர்கள் வேறு!'' என்று கூவினேன். ''அடே சீமா, நான் விரட்டி அனுப்பின பையனும் வரானே! ஒருகால் பையன்களைச் சேர்த்துக் கொண்டு ஏதாவது கலாட்டா பண்ண வரானோ?'' என்றார் அப்பா. ''அப்பா என் சிநேகிதர்களைப் பார்த்து அப்படிச் சொல்லாதீர்கள். அவர்களெல்லாம் ரொம்ப நல்லவர்கள். எங்கள் பள்ளிக்கூடத்தில் கெட்ட பையன்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களெல்லாம் இப்பொழுது இங்கே வரல்லே!'' என்றேன். முன்னணியில் வந்துகொண்டிருந்த வைத்தியை, ''வா அப்பா'' என்று கூப்பிட்டேன். வைத்தி நடுங்கியபடியே இரண்டு கைகளைக் கூப்பிக்கொண்டு முன்னால் வந்தான். (தொடரும்)

பாலர் கவி அரங்கம்

வெயில்

நினைத்து நினைத்துப் பார்க்க மனம் வெண்ணெயாய் உருகுதே,
என்றைக்குத்தான் கோடை வெயில் போகுமின்னு தோணுதே.
தண்ணி, தண்ணி என்று வாய் தவியாய்த் தவிக்குதே,
தாகத்துக்கு ஐஸ் போட்ட ஆரஞ்சின்னு கேட்குதே,
வெள்ளரியும், நுங்கும் கொஞ்சம் வெயிலுக்குக் கேட்குதே,
பால் வெண்ணெயைப் போல், ஐஸ்கிரீமும் வேணுமின்னு கேட்குதே,
உதை பந்து ஆடப் போனால் உடம்பெல்லாம் எரியுதே,
மட்டை அடி ஆடப் போனால் மண்டையெல்லாம் வெடிக்குதே,
கைப்பந்து ஆடப்போனால் கண்ணையெல்லாம் கூசுதே,
கண்ணன் வீட்டை எட்டிப் பார்த்து எட்டு நாள் போல் ஆகுதே,
கிட்டுவோடு கேரம் ஆட எட்டு நாளாப் போகல்லே,
பாழாய்போன கோடை வெயில் என்றைக்குத்தான் போகுமோ?

—வி. வைத்தியநாதன், வளவனூர்

கோடைகாலம்

கோடைகாலம் வந்திடுச்சு
குஷியெல்லாம் போயிடுச்சு
கொடுமையான வெயிலாலே
கொதிப்பெடுத்துப் போச்சுதே!
கோடைக்கானல் ஊட்டி என்று
கும்மாளம் போட்டுக்கிட்டு
குஷியாகப் போகணும்னா
கொள்ளைப் பணம் வேணுமே!
ஐஸ்க்ரீம் அஞ்சு தட்டை
அப்படியே தள்ளினாலும்
அடங்குதில்லே தாகம்தானே
அதுக்குமேலே காசுமில்லே!
காற்று என்ற பேச்சைக்காணோம்
கண்குளிரப் பச்சை காணோம்
கானல்வெக்கை மாத்திரமே
கண்டமிச்சமாச்சுதே!

—குயிலன்

கேளுங்கள் சொல்கிறேன்

புரோபஸர் விஞ்ஞானம்

பி. எல். மாதையன், சேலம்.

டெலிஸ்கோப்பின் தத்துவம் என்ன?

டெலிஸ்கோப்பின் அடிப்படைத் தத்துவம் ஒளியின் தன்மையைப் பொறுத்தது. சாதாரணமாக நேராகச் செல்லும் ஒளியை லென்சுகளும் (Lenses), வளைவு பரப்புள்ள ஆடிகளும் விலகச் செய்கின்றன என்பதுதான் முக்கியமான விஷயம்.

டெலிஸ்கோப்பில் இரண்டு வகைகள் உண்டு. ஒரு வகையில் ஒளியை விலகச் செய்து, ஒளி முறிவு ஏற்படுத்தும் பகுதிகள் லென்சுகளால் அமைந்தவை. இவ்வகைக்கு ஒளிமுறிவு டெலிஸ்கோப்பு (Refracting telescope) என்று பெயர். மற்ருெரு வகையில் லென்சுகளும், ஆடியும் வைத்திருக்கும். இவ்வகைக்குப் பிரதிபலிப்பு டெலிஸ்கோப்பு (Reflecting telescope) என்று பெயர்.

விஞ்ஞானம் பேசுகிருர் என்னும் கண்ணன் வெளியீட்டுப் பிரசுரத்தில் டெலிஸ்கோப்பு வேலை செய்யும் தத்துவம் படங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது.

ஆர். காசிநாதன், பண்ணுருட்டி.

நம் உடம்பில் எத்தனை எலும்புகள் இருக்கின்றன?

மனித எலும்புகளை மண்டை ஓட்டு எலும்புகள், முதுகெலும்பு, மார்புக் கூட்டு எலும்புகள், கை கால் எலும்புகள் (இவைகளுக்குப் புறத்துறுப்புக்கள் என்று பெயர்) புறத்துறுப்பு வளைய எலும்புகள் என்று சில வகைகளாகப் பிரித்திருக்கிருர்கள். பற்களும் எலும்பு வகையைச் சார்ந்தவை என்று சொல்லலாம்.

நம்முடைய பற்களையும் சேர்த்துக் கணக்கு எண்ணிஞல், மனித உடலிலுள்ள எலும்புகளின் மொத்த எண் 249.

சண்முகம், தென்மாம்பட்டு.

எக்ஸ்-ரே மிஷின் யாரால், எந்த வருஷத்தில் கண்டு பிடிக்கப் பட்டது?

எக்ஸ்-ரே என்பவை ஒரு வகைக் கிரணங்கள். அவை மிகவும் அற்புதமான சக்தி வாய்ந்தவை. ஒளி ஊடுருவிச் செல்ல முடியாத எத்தனையோ பொருள்களை அவை ஊடுருவிச் செல்லும் சக்தி உடையவை. கனமான ஈயச் சுவர்களை அவை ஊடுருவிச் செல்ல முடிவதில்லை.

எக்ஸ்-ரே கிரணங்களை முதன் முதலாகக் கண்டு பிடித்தவர் ரெண்ட்கென் (Roentgen) என்பவர். அவர் ஜெர்மனி நாட்டினர். ரெண்ட்கென் என்பதே அவரை ஜெர்மனி நாட்டினர் வழங்கும் முறை. பிற நாடுகளில் அவருடைய பெயரை ராண்ட்ஜென் என்று சொல்லுகிருர்கள்.

அவர் எக்ஸ்-ரே கிரணங்களை 1895-இல் கண்டு பிடித்தார். பிறகு எத்தனையோ விஞ்ஞானிகளும் தொழிற் கலைஞர்களுமாக (Technicians) எக்ஸ் - ரே இயற்றும் கருவிகளை மேன் மேலும் திருத்தி அமைத்து வருகிருர்கள்.

வி. சுப்பிரமணியம், இடைப்பாடி.

தங்கம், இரும்பு, காரீயம் - இவை எவற்றில் மிதக்கின்றன?

ஒரு பொருள் ஒரு திரவத்தில் மிதக்க வேண்டுமானல், அந்தத் திரவம் மிதக்கும் பொருளைவிட அடர்த்தி (density) மிக்கதாக இருக்கவேண்டும். சாதாரணமாகத் திரவ நிலையில் உள்ள பொருள்களில் மிகவும் அடர்த்தியானது பாதரசம்.

இரும்பும் காரீயமும் அதில் மிதக்கும். தங்கம் பாதரசத்தில் மிதக்காது அமிழ்ந்துவிடும். நீரின் அடர்த்தியை ஒன்று என்று வைத்துக் கொண்டு பொருள்களின் ஒப்பு அடர்த்திகளைக் கண்டுபிடித்துக் குறித்திருக்கிறார்கள்.

அந்தக் கணக்குப்படி பாதரசத்தின் ஒப்பு-அடர்த்தி சுமாராக $13\frac{1}{2}$. அதாவது, அது நீரைப்போல் $13\frac{1}{2}$ மடங்கு அடர்த்தி யுள்ளது. இதை நாம் சாதாரணமாக $13\frac{1}{2}$ மடங்கு கனம் உள்ளது என்று சொல்லுவோம்.

இரும்பின் ஒப்பு - அடர்த்தி 7 முதல் 8 வரை. காரீயத்தின் ஒப்பு அடர்த்தி சுமார் 11. தங்கத்தின் ஒப்பு-அடர்த்தி சுமார் 19. ஆகையால் தான் காரீயமும் இரும்பும் பாதரசத்தில் மிதப்பதும், தங்கம் மூழ்குவதும்.

த. பொ. ஆல்பிரட், சிங்கம்

ஒரு வருஷம் பன்னிரண்டு மாதங்கள் கொண்டது. ஒவ்வொரு மாதத்திற்கும் தனித் தனிப் பெயர்கள் உள்ளன. (அதாவது ஜனவரி முதல் டிசம்பர் வரை). இந்தப் பெயர்கள் எந்தத் தேசத்தில், எந்தக் காரணத்தைக் கொண்டு இடப்பட்டன?

ஒவ்வொரு நாட்டிலும் பல வகையான தெய்வங்களைச் சிருஷ்டித்து, பெயரிட்டு, வணங்கி வந்திருக்கிறார்கள். அந்தத் தெய்வங்களில் சில இக்காலத்திலும் வாழும் தெய்வங்களாகக் கொண்டாடப் படுகின்றன. வேறு சில தெய்வங்கள் மங்கி மறைந்துவிட்டன.

பழங்காலத்திலே ரோம நாட்டு மக்கள் வணங்கி வந்த சில தெய்வங்களைப் பாராட்டும் பொருட்டு, அவர்கள் மாதங்களுக்குப் பெயரிட்டார்கள் என்று பொதுவாகச் சொல்லலாம். சில மாதங்களுக்கு வேறு காரணங்களால் பெயர் கிடைத்திருக்கிறது. வரிசையாகப் பார்ப்போம்.

ஜேனஸ் என்னும் இருமுகக் கடவுளின் பெயரால் வழங்கும் மாதம் ஜனவரி.

லுபெர்க்கஸ் என்னும் தெய்வத்தைக் கொண்டாடும் ஒரு பரிசுத்த விழாவிற்குப் பெப்ருவா என்று பெயர். அதனால் பெயரிடப்பட்ட மாதம் பெப்ருவரி.

மார்ஸ் என்பது போர்த்தெய்வத்தின் பெயர். நம் நாட்டு முருகனோடு ஒப்பிடலாம். அப்பெயரால் பெற்றது மார்ச்சு.

ஏப்பிரல் என்பது தேவனும் அன்று, தேவியும் அன்று. இளவேனிலே உருவாகிய தேவதையின் பெயரே அது. எங்கும் புத்துயிர் பெறும் ஏப்பிரல் மாதம் அத்தேவதையின் பெயரைப் பெற்றது.

ஆட்லஸ் என்னும் தெய்வம்-நமது ஆதிசேஷனைப் போல்-உலகத்தைத் தாங்கி வருகிறது. அத்தெய்வத்தின் ஏழு பெண் மக்களில் புகழ் பெற்றவள் மேயா என்பவள். அவள் பெயரால் மே மாதத்துக்குப் பெயர் கிடைத்தது.

ஆறுவது மாதத்துக்குப் பெயர் வரக் காரணங்கள் இரண்டு: ஜூனோ என்னும் தேவியால் அம்மாதம் ஜூன் என்று பெயர் பெற்றது என்று சிலர் சொல்லுகிறார்கள். புகழ் பெற்ற ரோம குடும்பம் ஒன்றுக்கு ஜூனியஸ் என்று பெயர். அக்குடும்பத்தால் அம்மாதம் பெயர் பெற்றது என்றும் சிலர் கருதுகிறார்கள்.

மிகப் புகழ்பெற்ற வீரரும், அறிஞரும், மன்னரும் ஆகிய ஜூலியஸ் சீசர் என்பவரின் ஞாபகார்த்தமாக ஜூலை மாதம் இப் பெயரைப் பெற்றது.

அதற்கு அடுத்த மாதம் ஜூலியஸ் சீசரின் மரபில் தோன்றிய அகஸ்டஸ் என்பரால் பெயர் பெற்றது. அவர் ரோம சக்ரவர்த்தியாக இருந்து, அந்தச் சாம்ராஜ்யத்துக்குப் பெரும் புகழ் சம்பாதித்துக் கொடுத்தவர்.

அடுத்த மாதத்துக்கு ஸெப்டெம்பர் என்பது பெயர். அச் சொல்லுக்கு 'ஏழாவது' என்பது பொருள். இப்பொழுது அது ஒன்பதாவது மாதம், அல்லவா? அதற்கு இந்தப் பெயர் ஏன் வந்தது என்றால், அது ஒரு காலத்தில் ஏழாவது மாதமாக இருந்தது. அதனால்தான்;

அதற்கடுத்த மாதங்களும் எண்களைக் கொண்டு பெயர் பெற்றன. அக்டோபர் என்றால் 'எட்டாவது' நவம்பர் என்றால் 'ஒன்பதாவது' என்று பொருள். டிசெம்பர் என்றால் பத்தாவது என்பதைக் குறிக்கிறது. முன்னொரு காலத்தில் இவை எட்டாவது, ஒன்பதாவது பத்தாவது மாதங்களாக இருந்தன. இப்பொழுது பத்தாவது, பதினோராவது, பன்னிரண்டாவதாக இருக்கின்றன.

த. பொ. ஆல்பிரட், சிங்பம்.

சாதாரண வருஷத்திற்கு 28 நாட்களும், லீப் வருஷத்தில் 29 நாட்களுமாகக் கணக்கிடுகிறோம். லீப் வருஷத்திற்கு ஒரு நாள் அதிகமாகக் காரணம் யாது?

உன் கேள்வியில் பிப்ரவரி மாதத்தின் பெயரைக் குறிப்பிடவில்லை. ஆனால் அதைப்பற்றித் தான் நீ கேட்கிறாய் என்பதில் சந்தேகம் இல்லை. நீ ஆசையோடு கேட்கும்போது கவனத்தோடும் கேட்பது நல்லது, அல்லவா?

பூமி சூரியனைச் சுற்றி வரும் காலத்தையே நாம் 'வருஷம்' என்று வைத்துக்கொண்டிருக்கிறோம். வானசாஸ்திரிகள் போட்டிருக்கும் கணக்குப்படி, பூமி ஒரு முறை சூரியனைச் சுற்றி வருவதற்குச் சுமார் 365¼ நாட்கள் ஆகின்றன.

நியாயமாகக் கணக்கிட்டால், ஒரு வருஷம் தொடங்கி 365¼ நாள் ஆன பிறகே அடுத்த வருஷம் தொடங்கவேண்டும். ஆனால் ¼ நாளிலிருந்து வருஷத்தைத் தொடங்குவது எப்படி? அதனால் எத்தனை தொந்தரவு உண்டாகும்? ஆகையால், அந்த ¼ நாளை விட்டு விட்டு ஒரு வருஷத்துக்கு 365 நாள் என்று தோராயமாக வைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் இந்த ¼ நாளைக் கணக்கில் சேர்க்காமலே போனால், நாலு வருஷத்தில் ஒரு நாள் கணக்கில் வித்தியாசம் வந்துவிடும். ஆகையால் நாலு வருஷத்துக்கு 1 நாளை எப்படியாவது கணக்கில் சேர்த்து விட்டால் கணக்குச் சுமாராகச் சரியாகிவிடும்.

மாதங்களில் எல்லாம் நாள் குறைந்த மாதம் பிப்ரவரி மாதம் தான். அதற்குச் சாதாரணமாக 28 நாள் என்பது தெரிந்ததே. நாலு வருஷத்துக்கு ஒரு முறை அந்த மாதத்தில் கூட ஒரு நாளைச் சேர்த்துக்கொண்டு 29 நாள் என்று வைத்துக்கொண்டால், கணக்கு அநேகமாகச் சரியாக வந்துவிடுகிறது.

அப்படிச் சேர்த்துக்கொள்ளும் வருஷத்துக்கு லீப் வருஷம் என்று பெயர்.

பூமி சூரியனைச் சுற்றி வரும் காலம் திருத்தமாக 365¼ நாட்கள் அல்ல. சற்றே வித்தியாசம் உண்டு. இந்த வித்தியாசத்தினால் கணக்கில் சிறிது சிறிதாகப் பிழை ஏற்பட்டுக் கொண்டே வரும். அதைத் திருத்துவதற்காகவும் சில சிறிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். உதாரணமாக, 1892, 1896 என்பவை லீப் வருஷங்கள்; ஆனால் லீப் வருஷமாகக் கணக்கிட வேண்டிய 1900 லீப் வருஷம் அன்று. இது போலவே 2100 லீப் வருஷம் இல்லை.

ஆர். காசிநாதன், பண்ணுருட்டி.

'மண்டை ஓட்டில் தலையெழுத்து என்று எழுதியிருக்கிறது' என்று சொல்கிறார்களே, அது உண்மையா?

இல்லை. மண்டையோடு ஒரே எலும்பால் அமைந்ததில்லை. அதில் எட்டு எலும்புகள் ஒன்றாகப்பொருத்தப் பட்டிருக்கின்றன. இந்தப் பொருத்துக்கள் வளைந்தும் நெளிந்தும் இருக்கும். தூரத்திலிருந்து பார்த்தால், இவைகளை ஒருவாறு எழுத்து வரியோடு ஒப்பிடலாம். அதனால்தான் இவ்வகையான தப்பு எண்ணம் கற்பனையாக ஏற்பட்டிருக்கலாம்.

இப்படி வளைந்து வளைந்துள்ள பொருத்துகளுக்குத் தையல்கள் (Sutures) என்று ஆங்கிலத்தில் சொல்லுவதும், இவைகள் துணியில் தைத்த தையலைப் போல் தோன்றும் காரணத்தால்தான். இதுவும் ஒரு கற்பனைப் பெயர்.

பகைவனுக்கு அருள்வாய்

தி. ஜயந்தி

"தம்பி, நான் ஒரு மருந்து வைத்திருக்கிறேன். அதன் விலை 20 ரூபாய். பணத்தை எடுத்துக்கொண்டு என் டிஸ்பென்ஸரிக்கு வா. மருந்தைத் தருகிறேன். இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் அந்த மருந்து உன் தந்தையின் உடலில் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் கடவுள் விட்ட வழிதான். பணத்தை எடுத்துக்கொண்டு சீக்கிரம் வா. என்ன, நான் வரட்டுமா?'' என்று கூறிக்கொண்டே டாக்டர் தம் காரில் ஏறிக்கொண்டார்.

ரவிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இருபது ரூபாய்! இதை நினைத்ததுமே நடுங்கினான். அவ்வளவு பணத்திற்கு எங்கே போவது? தாயில்லாத தன்னை அக்குறை தெரியாதபடி வளர்த்து வரும் தன் அருமைத் தந்தை, சுய நினைவின்றிக் கிடப்பதைப் பார்த்தான். அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது.

ஏதோ நினைத்துக்கொண்டவன் போல வாசற் கதவை மெதுவாகச் சாத்திவிட்டு தெருவில் இறங்கி வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

* * *

"ஸார்!''

''யாரது?''

''உங்க மில்லில் கணக்குப்பிள்ளை வேலை பார்க்கிறாரே ராஜகோபாலன், அவருடைய மகன் நான். என் பெயர் ரவி. என் தந்தைக்கு உடம்பு மிக அதிகமாக இருக்கிறது. டாக்டர் வந்து பார்த்துவிட்டு இருபது ரூபாய்க்கு ஒரு மருந்து எழுதிக் கொடுத்திருக்கிறார். அந்த மருந்து உடலில் சென்றால்தான் உயிருக்கு ஆபத்தில்லை என்கிறார். ஆதலால் தாங்கள் தயவு செய்து இருபது ரூபாய் கொடுங்கள்.''

''என்ன அது? இருபது ரூபாயா? என்னிடம் ஒரு பைசாகூடக் கிடையாது. இன்றைக்குத்தான் தேதி 20. என்னிடம் ஏது பணம்?''

"ஸார், என் தந்தை மிகவும் அபாயகரமான நிலேயில் இருக்கிருர். பணம் சும்மா கேட்கவில்லே. சம்பளத்தில் கழித்துக்கொள்ளுங்கள்."

"உன் தந்தை பத்து நாளாக வேலேக்கு வரவில்லே. என்ன பணம் கொடுப்பது? இப்பொழுது என்னிடம் ஒரு பைசாகூட இல்லே."

"இவ்வளவு பெரிய மில்லின் முதலாளியான உங்களிடமா பணம் இருக்காது? கொஞ்சம் இரக்கம் காட்டுங்கள், ஸார்......."

"இங்கே என்ன பணம் கொட்டியா கிடக்கு?"

"ஸார், உங்களேக் கெஞ்சிக் கேட்கிறேன். என் தந்தையின் உயிர் இப்பொழுது உங்கள் கையில்தான் இருக்கிறது."

"என்னடா இது, சும்மா தொண தொணன்னு. ஒரு பைசாகூடக் கிடையாது. டேய் யாரங்கே! இவனே வெளியே போகச் சொல்லு."

"உங்கள் வேலேக்காரர்களுக்குச் சிரமம் எதுக்கு? நானே போய் விடுகிறேன்."

விடுவிடு என்று வெளியே வந்தான் ரவி. அவன் மனம் மிகவும் வருந்தியது.

காய்ச்சல் அடிக்க ஆரம்பித்த பொழுதே கையில் போதிய பணமில்லே. அப்பொழுதே ரவி தந்தையிடம், "அப்பா, உங்க முதலாளிகிட்டே போய் நான் வேண்டுமானுல் 25 ரூபாய் கேட்டுப் பார்க்கிறேன். சம்பளத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அடைத்துவிடலாம்" என்ருன்.

அதற்கு அவன் தந்தை, "எங்க முதலாளிக்கு உதவி செய்வது என்பதே பிடிக்காது. அவரிடம் போய்க் கேட்பதும் ஒன்றுதான். அவரைக் கேட்காததும் ஒன்றுதான். எக்காரணத்தைக்கொண்டும் அவரிடம் உதவிக்குப் போகக்கூடாது" என்ருர்.

தந்தை சொல்லியது எவ்வளவு உண்மை என்று நினேத்தான் ரவி. 'டாக்டர் சொல்லியபடி இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் அந்த மருந்து அப்பாவின் உடலில் செல்லாவிட்டால்.......?' அவனுல் நினேக்கவே முடியவில்லே. விக்கி விக்கி அழுதான்.

திடீரென்று அவனுக்கு அவன் தந்தை பெட்டியில் ரொம்ப நாளாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்த மோதிரம் ஞாபகம் வந்தது. எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அதை அவர் விற்றதே இல்லே.

ஒரு நாள் ரவி தன் தந்தையிடம், "அப்பா, இந்த மோதிரத்தைப் பார்த்தாலே மிகவும் விலேயுயர்ந்ததாகத் தோன்றுகிறதே! இது உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?" என்ருன்.

அதற்கு அவர், "ரவி, இது நண்பன் ஒருவனுடையது. பணக்காரனுக இருந்த அவன் காலத்தின் கோலத்தினுல் ஏழையாகிவிட்டான். இந்த மோதிரம் அவனுடைய குடும்பத்தின் பரம்பரைச் சொத்து. இதை விற்க மனசில்லாமல் என்னிடம் கொடுத்து, 'ராஜகோபால், நீ இதைப் பத்திரமாக வைத்திருப்பாய் என்ற நம்பிக்கையில்தான் நான் உன்னிடம் தருகிறேன். இதை நான் எப்பொழுது, எந்தச் சமயத்தில் கேட்டாலும் கொடுக்கவேண்டும்' என்ருன். நானும், 'சரி' என்றேன். அப்புறம் அவன் இலங்கைக்குச் சென்றுவிட்டான். நானும் கிராமத்தை விட்டுச் சென்னேக்கு வந்துவிட்டேன். ஆதலால் அவனுடைய மோதிரத்தை நான் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொன்னுர்.

'மோதிரத்தைத் தவிர வேறு விலேயுயர்ந்த பொருள் ஒன்றுமில்லே. அப்பாவோ ஆபத்தான நிலேமையில் இருக்கிருர். இவ்வளவு நாளாக இல்லாமல் அந்த நண்பர் இப்பொழுது வந்துதானு கேட்கப் போகிருர்? சம்பளம் வந்ததும் திருப்பிவிடலாம். ஆபத்துக்குத் தோஷமில்லே.' - இப்படியாக எண்ணிக்கொண்டே பெட்டியைத் திறந்து மோதிரத்தை எடுத்துக்கொண்டு ஓடினுன் மார்வாடிக் கடையை நோக்கி.

அன்று பீச்சில் அதிகக் கும்பல் இல்லே; தனி இடமாக ஓர் இடம்

பார்த்து அமர்ந்து கொண்டான் ரவி. ஒரு நாளைக்குக்கூட, பீச்சுக்கு வராமல் இருக்கமாட்டான். சமுத்திரத்தின் அலையைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான். அவன் மனம் சந்தோஷமாகவும் அமைதியாகவும் இருந்தது. காரணம், அன்று காலையில் நடந்த சம்பவம்தான்.

தந்தையின் உயிரைக் காக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மோதிரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு வேகமாக ஓடினான். எவ்வளவு நேரம் அப்படி ஓடினானோ அவனுக்கே தெரியாது. தான் ஒரு மனிதர்மீது மோதிக்கொள்வதாக உணர்வு ஏற்படவே திடுக்கிட்டு நின்றான். மோதின அதிர்ச்சியில் கையிலிருந்த மோதிரம் 'கிணுங்' என்ற சத்தத்துடன் அந்த மனிதனின் காலடியில் விழுந்தது.

அந்த மனிதர், ''என்ன தம்பி, ரோட்டிலே இப்படியா வேகமா ஓடி வரது?'' என்று கூறிக்கொண்டே தம் காலடியில் விழுந்த மோதிரத்தை எடுத்தார். பிறகு அம் மோதிரத்தைப் பார்த்தார். உடனே அவர் முகம் மலர்ந்தது. ''தம்பி, நீ யார்? இந்த மோதிரம் உனக்கு எப்படிக் கிடைத்தது?'' என்று வினவினார். ரவி பதில் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக நின்றான். மீண்டும் அவர் வற்புறுத்தவே அந்த மோதிரத்தைப்பற்றியும் தன் தந்தையைப் பற்றியும் கூறிவிட்டு, ''என் தந்தை ரொம்பவும் அபாயகரமான நிலையில் இருப்பதால் அவர் உயிரைக் காக்கும்பொருட்டு அவருக்குக்கூடத் தெரியாமல் எடுத்துக் கொண்டு மார்வாடிக் கடையில் பணம் வாங்க வந்தேன்'' என்றான்.

''தம்பி'' என்று அவர் ரவியைக் கட்டிக்கொண்டு, ''நீ என் நண்பன் ராஜகோபாலனின் மகன்தான். நான் இலங்கையிலிருந்து போன வாரம்தான் வந்தேன். நல்லவேளை. நான் சமயத்திற்கு வந்தேனே. டாக்டரைக் கூட்டிக்கொண்டு உன் தந்தையைப் பார்க்கலாம் வா'' என்றார்.

ரவி ஆச்சரியத்துடன் அவரை அழைத்துக்கொண்டு தன் வீட்டை அடைந்தான். ரவியின் தந்தை இருக்கும் நிலையைப் பார்த்ததும் அவர் நண்பர் 'ஹோ' வென்று அழ ஆரம்பித்துவிட்டார். ரவியிடம் பணத்தைக் கொடுத்து மருந்து வாங்க அனுப்பினார்.

மருந்து உடலில் புகுந்ததும் லேசாகக் கண் விழித்தார் ராஜகோபாலன். தம் நண்பனைக் கண்டதும் அவர் திகைத்தார். ரவி நடந்ததைக் கூறினான்.

''இனிமேல் பயமில்லை. ஆனால் ஒரு மாதம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்று டாக்டர் கூறவே ரவியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

* * *

''ஐயோ ஓடி வாருங்களேன்? உதவிக்கு ஓடி வாருங்களேன்!''

ஆசிரியர்: பாம்பு லோகிதாசனைக் கடித்தது. இது என்ன காலம்?

பையன்: கேள்வியே சரி இல்லை சார்! இருக்கிறானா இறந்துவிட்டானா என்று சொல்லவில்லையே!

ஆசிரியர்: ஏன்?

பையன்: பாம்பு கடித்து இறந்துபோயிருந்தால் இறந்த காலம். பிழைத்துவிட்டால் நிகழ் காலம், ஸார்!

என்ற தீனக்குரல் கேட்டுச் சுய உணர்வு பெற்றான் ரவி. உடனே சப்தம் வந்த திக்கை நோக்கி ஓடினான்.

அங்கே அவன் தந்தையின் முதலாளியும் அவர் மனைவியும் நின்று கத்திக்கொண்டிருந்தனர். அவருடைய ஐந்து வயது அருமை மைந்தன் கடலில் விழுந்து அலைகளுடன் போராடிக்கொண்டிருந்தான். ரவிக்கு நீச்சல் நன்றாகத் தெரியும். ஆனால் அந்த முதலாளிக்கு உதவி செய்ய அவன் மனசு இடம் தரவில்லை. ''உதவி செய்'' என்றது உள் மனசு. ''உதவி செய்யாதே'' என்றது வெளி மனசு.

''அருமை மைந்தன் உயிருக்காகக் கதறுகிறான்; உதவி செய்.''

''உன் தந்தையின் உயிரைக் காக்க உதவாத அவனுக்கு உதவி செய்யாதே.''

''அவன் செய்யாவிட்டால் அவன் மைந்தன் என்ன செய்வான்? செய்யாதவர்களுக்குச் செய்து காண்பி. பெருந்தன்மையாக உதவி செய்''-ரவிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

'பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே - பகைவனுக்கருள்வாய்.' எங்கோ ரேடியோ பாடிய தொனி அவன் காதில் விழுந்தது. 'ஒருவேளை இது எனக்காகத்தான் பாடப்பட்டதோ?'— அவ்வளவுதான். அடுத்த விநாடி கடலில் புகுந்து கஷ்டப்பட்டு அக்குழந்தையைக் கரை சேர்த்தான். தனக்குத் தெரிந்த முதல் உதவிகளைச் செய்தான். லேசாகக் கண் விழித்தான் முதலாளியின் மைந்தன்.

உடனே முதலாளி, ''ரவி, என்னை மன்னித்துவிடு. உன்னிடம் இருக்கும் பெருந்தன்மைகூட என்னிடம் இல்லை. சமயத்திற்கு நீ வந்து உதவி செய்யாவிட்டால் என் நிலைமை எப்படி இருக்கும்? ரவி, இத்தகைய உபகாரத்திற்கு நான் உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? ஆதலால் முதல் தேதியிலிருந்து உன் தந்தைக்கு உதவி மானேஜர் வேலை தருகிறேன்'' என்றார்.

''உங்கள் உதவிக்கு மிகவும் வந்தனம். ஆனால் உங்கள் உதவியை ஏற்றுக்கொள்ளும் நிலையில் என் தந்தை இல்லை. என்ன விழிக்கிறீர்கள்? என் தந்தையின் பணக்கார நண்பர் புதிதாக ஆரம்பிக்கப்போகும் மில்லில் என் தந்தை மானேஜராக இருக்க ஒப்புக்கொண்டுவிட்டார். ஆதலால் நீங்கள் விரும்பினால் உங்கள் மில் சிப்பந்திகளுக்குச் சம்பள உயர்வு கொடுங்கள்.''

சட்டையைப் பிழிந்துகொண்டே திரும்பிக்கூடப் பார்க்காமல் விடுவிடு என்று தன் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தான் ரவி.

பச்சைக் கல்

ஜோதிர்லதா கிரிஜா

'கினு கினு' வென்று டெலிபோன் மணி ஒலித்த ஓசை கேட்டு இன்ஸ்பெக்டர் சிவானந்தம் அவசரமாகப் போனுக்கு அருகே விரைந்தார்.

''ஹல்லோ! யார் பேசுகிறது?''

''நான்தான்! வரதன் பேசுகிறேன்.''

''வரதனா, ஏது அபூர்வமாயிருக்கிறதே! என்ன விசேஷம்? ஏதாவது திருட்டுப் போய்விட்டதா?''

''இல்லை. அப்படித் திருட்டுப் போகாமல் இருக்கவேண்டும் என்றுதான் உங்களைக் கூப்பிடுகிறேன்.''

''ஏன்? என்ன விசேஷம்?''

''போனில் பேச வேண்டாமே. இங்கே வந்தீர்களானால் விவரமாகச் சொல்கிறேன்.''

சிவானந்தம் வரதனுக்கு மிகவும் நெருங்கிய நண்பர். ஆகவே தமக்கிருந்த பல அவசர அலுவல்களை யெல்லாம் தாற்காலிகமாக ஒத்திப் போட்டுவிட்டு, சிவானந்தம் தம் நண்பருடைய வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

கிளம்பிய ஐந்தே நிமிஷங்களுக்கெல்லாம் இன்ஸ்பெக்டர் சிவானந்தத்தின் கார் வரதனுடைய பங்களா வாசலை அணுகியது. அவரை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார் வரதன். இருவரும் உட்கார்ந்துகொண்டு காபி சாப்பிட்டார்கள்.

சாப்பிட்டானதும் வரதன் தம் உதட்டை நாக்கால் தடவிவிட்டுக் கொண்டு சொல்லத் தொடங்கினார்.

''விலை உயர்ந்த ஒரு பச்சைக் கல் என்னிடம் இருக்கிறது. என் பாட்டனார் காலத்துப் பூர்விகச் சொத்து. அதைப்பதித்து ஒரு மோதிரம் செய்யவேண்டும். செய்த பிறகு அதைப் பம்பாய் மார்க்கெட்டில் விற்றுவிடலாமென்று இருக்கிறேன். பம்பாயில் எனக்குத் தெரிந்த சேட் ஒருவர் இருக்கிறார். அவரிடம் கல்லாகவே விற்று விடலாமே என்றுதான் பார்த்தேன். ஆனால் அந்த ஆள், 'கல்லைப் பதித்து மோதிரமாகச் செய்து கொடுத்தால் வாங்கிக்கொள்ளுகிறேன்' என்று சொல்லிவிட்டார். அதனால்தான் இந்தத் தொல்லை. உம்மோடு தட்டானிடம் கல்லைக் கொண்டுபோய் மோதிரம் செய்யக் கொடுத்தால் பண்டம் பத்திரமாகத் திரும்பி வருமே என்பதற்காகத்தான் கூப்பிட்டேன்!'' என்றார். அடுத்த விநாடியே இருவரும் தட்டான் வீரபத்திரனுடைய வீட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

வீரபத்திரன் விஷயத்தைக் கேட்டதுமே நடுங்கிப் போனான். ''சாமி! நான் பாட்டுக்கு வம்பு வழக்கு இல்லாமல் பிழைத்துக்கொண்டிருக்கிறேன். எனக்கு எதற்கு இந்தத் தண்டா? வேறு யாரையும் கண்டு வேலை தாருங்கள். லட்ச ரூபாய் பெறுமானமுள்ள கல் என்று சொல்வதைக் கேட்டால் எனக்கு உதறல் எடுக்கிறது. ஒரு வேளை போல் இன்னொரு வேளை இருக்காது, சாமி! எவனாவது உளவறிந்துகொண்டு வந்து என்னிடமிருந்து கல்லைக் கிளப்பிக் கொண்டு போய்விட்டால் வம்பு வந்து சேரும்! சிவா, ராமா என்று கிடக்கிற இந்த நாய்க்கு ஏதுக்கு இந்தத் தொல்லை?'' என்று ஒரு பெரிய கும்பிடு போட்டான்.

இன்ஸ்பெக்டர் ஊரிலிருந்த தட்டான்கள் எல்லோரிலும் வீரபத்திரன் எவ்வளவோ நல்லவன் என்று கேள்விப்பட்டிருந்தார். அதனால் தயக்கம் ஏதும் இல்லாமல் கல்லை வாங்கிக்கொண்டு மோதிரம் செய்யும்படி மன்றாடினார். வரதனும் மிகவும் கேட்டுக்கொண்டார். எனினும் வீரபத்திரன் இணங்கவில்லை. ''பெரிய இடத்துச் சமாசாரமே நமக்கு வேண்டாம்!'' என்று ஒரேயடியாக மறுத்துவிட்டான்.

கடைசியில் சிவானந்தமும் வரதனும் வேறொரு பொற்கொல்லனிடம் புறப்பட்டுச் சென்றார்கள்.

பரமானந்தன் என்ற அந்தப் பொற்கொல்லன், 'தன்னைத் தேடி இத்தனை பெரிய கௌரவம் வருகிறது' என்று மகிழ்ச்சி யடைந்தவனாக பச்சைக் கல்லையும் அதைப் பதித்து மோதிரம் செய்வதற்கு வேண்டிய தங்கத்தையும் வாங்கி வைத்துக்கொண்டான். ஒரு வாரத்திற்குள்ளாக மோதிரத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்ற நிபந்தனைக்குப் பரமானந்தன் ஒப்புக்கொண்டான்.

ஒரு நாள் கழித்து, சிவானந்தத்தின் வீட்டு டெலிபோன் மறுபடியும் கணகணத்தது. சிவானந்தம் ஒலி வாங்கியை எடுத்துக் காதிலே வைத்துக்கொண்டார். பேசியவர் வரதன்தான்.

''இன்ஸ்பெக்டர் சார்! நான் பயந்தபடியேதான் கடைசியில் நடந்துவிட்டது. பச்சைக் கல்லைக் காணவில்லை என்று தட்டான் பரமானந்தன் இப்போது என்னிடம் வந்து கையைப் பிசைந்துகொண்டு, கண் கலங்க நின்றுகொண் டிருக்கிறான். கல்லை எங்கேயோ மறைத்துவிட்டு நடிக்கிறான் என்றே என் மனத்துக்குப் படுகிறது. நீங்கள் வந்தீர்களானால் தேவலை.''

இன்ஸ்பெக்டர் சிவானந்தம் அடுத்த ஐந்தே நிமிஷங்களுக்கெல்லாம் வரதனின் வீட்டில் ஆஜரானார். அவரைப் பார்த்ததும் பரமானந்தன் மடேரென்று கீழே விழுந்து காலைப் பிடித்துக்கொண்டு, ''நீங்கள்தாம் இந்த ஏழையைக் காப்பாற்றவேண்டும். எசமான்! நான் ஒரு குற்றமும் அறியாதவன். பச்சைக் கல்லை எந்தப் பாவி எடுத்துக்கொண்டு போனானோ?'' என்று சொல்லியபடி கண்ணீர் பெருக்கினான். இன்ஸ்பெக்டர் ஏதும் சொல்லாமல் தம் கால்களை அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு, பரமானந்தன் கண்களை ஊடுருவி நோக்கினார்.

''அப்பனே! நீ குற்றமற்றவனாகவே இருக்கலாம். ஆனால் நீதான் கல்லை மறைத்து வைத்தவன் என்று நாங்கள் சொல்லவில்லை. எனினும் சட்டப்படி நீ சந்தேகத்துக்குரியவனாதலால் உன்னைக் கைது செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்'' என்று வருத்தத்துடன் கூறிவிட்டுத் தாம் தயாராக எடுத்து வந்த விலங்கைப் பரமானந்தனின் கைகளில் பூட்டினார்.

ஒரு போலீஸ் ஜவானை உடனே வரவழைத்துப் பரமானந்தனைப் போலீஸ் நிலையத்துக்கு அழைத்துப் போகச் செய்தார் சிவானந்தம். பரமானந்தன் அழைத்துச் செல்லப்பட்ட பின்னர், வரதன் சிவானந்தத்தைப் பார்த்து, ''சார்! இவன் பச்சைக் கல்லை எங்கேயோ கண்டுபிடிக்க முடியாத மறைவிடத்தில் பதுக்கி வைத்துவிட்டுச் சும்மா நடிக்கிறான். இவனை வெறுமே விடக்கூடாது. உடல் துடிக்கும்படியாக வாட்டி வதக்கினால் ஒழிய இவன் உள்ளதை ஒப்புக்கொள்ளவே மாட்டான்'' என்று பொருமினார்.

சிவானந்தம், ''உங்கள் ஊகம் உண்மையாக இருக்கலாம். என்றாலும் இரண்டொரு நாள் பொறுத்துப் பார்ப்போம். பரமானந்தனுடைய வீட்டையும் பட்டறையையும் சோதனை செய்வோம்'' என்றார். இருவரும் உடனேயே நான்கு ஜவான்களை உடனழைத்துக்கொண்டு பரமானந்தனின் வீட்டுக்குப் போனார்கள். வீட்டுத் திண்ணையில் இருந்த பட்டறையை முதலில் பரிசோதித்துவிட்டு வீட்டுக்குள் புகுந்தார்கள். வீட்டின் அறை ஒன்றைத் துழாவிக்கொண் டிருந்த போது, ''சார், தபால்!'' என்ற குரல் கேட்டது.

சிவானந்தம் வாசலுக்கு வந்து கடிதத்தை வாங்கிப் படித்தார்.

படித்ததும் அவர் முகம் மலர்ந்தது. அந்தக் கடிதத்தை வரதனிடம் கொடுத்தார். வரதன் அதை ஆவலுடன் வாங்கி வாசித்தார். அந்தக் கடிதத்தில்—

''அன்புள்ள அப்பாவுக்கு. நீங்கள் கொடுத்த கல்லை இங்கு நம் வீட்டின் கொல்லைப்புறம் இடிந்த சுவரில் பதித்துவிட்டேன்......''

''பார்த்தீர்களா, சிவானந்தம்! நான்தான் அப்போதே சொன்னேனே?'' என்று குதித்தார் வரதன். அடுத்தபடியாகச் சிவானந்தமும் வரதனும் மேற்கொண்டு வீட்டை ஆராய்ந்து பார்ப்பதில் பயன் இல்லை என்று உணர்ந்தவர்

களாகப் போலீஸ் நிலையத்தை நோக்கிப் புறப்பட்டனர். சிறையில் வருத்தமே உருவாய் உட்கார்ந்திருந்த பரமானந்தனிடம் அவன் மகன் அரவங்காட்டிலிருந்து எழுதியிருந்த அந்தக் கடித உறையைக் கொடுத்தார்கள். அதைப் படித்துப் பார்த்த பரமானந்தத்தின் முகத்தில் பீதியும் கலக்கமும் படருவதை இருவர் விழிகளும் கவனிக்கப் பிசகவில்லை.

''கொஞ்ச நேரத்துக்கு முன்பு என் காலைப் பிடித்துக்கொண்டு கதறியதெல்லாம் வெறும் பாசாங்கு தானே? இந்தக் கடிதம் சொல்லுகிறதே உன் மொல்லமாரித் தனத்தை!'' என்று இன்ஸ்பெக்டர் சத்தம் போட்டார். பீதியும் கலவரமும் பரமானந்தத்தின் முகத்திலிருந்து மறைந்தன. அவற்றுக்குப் பதிலாக, லேசான நம்பிக்கைப் புன்னகை ஒன்று அவன் வாடிய முகத்தில் பளிச்சிட்டது.

''ஐயா! நீங்கள் கடிதத்தைத் தவறாக அர்த்தம் செய்துகொண்டிருக்கிறீர்கள். 'கல்' என்ற சொல்லைப் பச்சைக்கல் என்று புரிந்து கொண்டுவிட்டீர்கள். பச்சைக்கல் அல்ல! வெறுங்கல். அரவங்காட்டிலுள்ள எங்கள் வீட்டுக் கொல்லைப்புறச் சுவர் இடிந்திருக்கிறது. ஒரே ஒரு கல் மாத்திரம் பெயர்ந்து பொத்தலாயிருந்தது. அதை அடைப்பதற்காக நான் போன மாதம் அரவங்காட்டுக்குப் போயிருந்த போது, இரண்டடி நீளம், இரண்டடி அகலமுள்ள ஒரு பெரிய கல்லை வாங்கிக் கொடுத்துவிட்டு வந்தேன். நான் சொல்லுவது உண்மையா பொய்யா என்பதை நேரில் வேண்டுமானாலும் போய்த் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றான்.

அன்றே சிவானந்தம் புறப்பட்டுப் போனார். அரவங்காட்டில் இருந்த பரமானந்தனின் வீட்டுச் சுவரில் ஒரு புத்தம் புதிய கல் பொருத்தப்பட்டிருந்தது. ஈரங்கூடக் காயவில்லை. பரமானந்தன் கூறினது உண்மைதான் என்பதை அவர் உணர்ந்து கொண்டவராக ஊர் திரும்பினார்.

தம் உத்தியோக உடுப்புகள் இல்லாமல், சாதாரண வேஷ்டி, சட்டை, மேல் துண்டுடன் அவர் ரெயில்வே



வந்த மாமி: உன் பையன் டாக்டராகப் போகிறானாமே?

பையனின் தாயார்: அதுவா! அடிக்கடி எனக்கு ஏதாவது கோளாறு வந்துவிடுகிறதா, இவன்தான் டாக்டரிடம் ஓட வேண்டியிருக்கிறது: அதனால்தான் அவன் அப்படிச் சொல்கிறான்!

நிலையத்திலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தார். சீக்கிரம் வீட்டுக்குப் போகவேண்டும் என்பதற்காகக் குறுக்கு வழியாக நடந்து வந்துகொண்டிருந்தார். அப்போது, ஓர் இடிந்த குட்டிச் சுவருக்குப் பின்புறம் இருவர் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்க நேர்ந்தது. அதைப் பற்றி அவர் பிரமாதமாக எண்ணக்கூடியவரல்லதான். ஆனால், அவர்களின் பேச்சில் இடையிடையே பச்சைக்கல் என்ற சொல் அடிபடுவதைக் கவனிக்க நேர்ந்த பிறகும் அவரால் அதை அலட்சியமாக எண்ணித் தம் போக்கில் போக முடியவில்லை. எனவே, அந்தச் சுவரின் இன்னொரு பக்கத்தில் மறைந்து உட்கார்ந்தவாறு அதிலிருந்த ஒரு பொத்தலின் வழியே அவர்கள் அறிந்துகொள்ள முடியாதபடி அவர்கள் முகங்களை ஊன்றிக் கவனித்தவாறே பேச்சையும் கேட்கலானார்.

அவர்கள் பேச்சை இரண்டு நிமிஷங்கள் கவனித்ததுமே, பச்சைக் கல் மறைந்த மர்மம் அவருக்கு விளங்கிவிட்டது. இன்ஸ்பெக்டர் எப்போதுமே தம் இடுப்பில் ஒரு கைத் துப்பாக்கி வைத்திருக்கும் பழக்கமுடையவர். இதுமாதிரித் தற்செயலாகப் பிடிபடும் திருடர்களைத் தப்ப விடாதிருப்பதற்கென்றே அவர் அந்த வழக்கம் கொண்டிருந்தார்.

இப்போது, சிவானந்தம் தம் கைத் துப்பாக்கியை நீட்டியவாறே அவர்கள் முன்னால் குதித்தார். அருண்டுபோன இருவரும் அப்படியே பிரமை பிடித்துப் போய் நிலைகுத்திக் கற்சிலைகளாகி நின்றார்கள். சிவானந்தத்தின் கட்டளைப்படி இருவரும் ஒருவர் தோள்மேல் இன்னொருவர் கைபோட்டு அணைத்தபடி முன்னால் நடந்தார்கள். சிவானந்தம் பின்னால் கையில் பிடித்த துப்பாக்கியுடன் நடக்கலானார்.

சிறிது நேரத்தில் மூவரும் போலீஸ் நிலையத்தை அடைந்தார்கள். இருவரும் பச்சைக் கல்லைத் தாங்கள் பதுக்கி வைத்திருக்கும் இடத்தை வம்பு ஏதும் செய்யாமல் சொல்லிவிட்டார்கள்.

கல்லுக்கு உடையவரான வரதன் வரவழைக்கப்பட்டார். அவரிடம் சிவானந்தம் இரண்டு கள்வர்களையும் காட்டினார். வரதனின் விழிகள் வியப்பால் விரிவடைந்தன. முதல் முதலில் நம்பிக்கையான பத்தர் என்ற எண்ணத்துடன் இன்ஸ்பெக்டரும் வரதனும் வீரபத்திரன் என்பவரை நாடிச் சென்றார்களல்லவா? அந்த வீரபத்திரனும் அவனுடைய தம்பியுந்தாம் திருடர்கள்!

"அதிக விலையுள்ள கல்லை வாங்கிக் கொண்டால் ஆபத்து வரும்" என்று முதலில் பெரிதும் வாதாடி, மிகுந்த நாணயஸ்தனைப் போல

நடித்து, மோதிரம் பண்ண மறுத்துவிட்ட வீரபத்திரன், இன்ஸ்பெக்டரும் வரதனும் பட்டறையிலிருந்து அகன்றதும், அவர்கள் எங்கே போகிறார்கள் என்பதைக் கண்டு வருவதற்காகத் தன் தம்பியை அவர்கள் பின்னால் ஏவினான். இருவரையும் பின் தொடர்ந்த அவன் தம்பி அவர்கள் பத்தர் பரமானந்தனிடம் பச்சைக் கல்லைக் கொடுத்திருப்பதாக வந்து சொன்னான். மறுநாள் இரவு வீரபத்திரனும், அவன் தம்பியுமே திருடர்களாகி, பரமானந்தனுடைய பட்டறையிலிருந்து அந்தப் பச்சைக்கல்லைக் கிளப்பிக் கொண்டு வந்துவிட்டார்கள்.

இப்போது தங்கள் குட்டு வெளிப்படுவதற்கு முன்னதாக வட இந்தியாவுக்குக் கம்பி நீட்டத் திட்டமிட்டிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் குட்டிச்சுவருக்குப் பின்னால் உட்கார்ந்து, இருவரும் பேசிக்கொண்ட பேச்சிலிருந்துதான் இன்ஸ்பெக்டர் சிவானந்தம் தெரிந்துகொள்ள நேர்ந்தது. தாம் கேட்டவற்றையெல்லாம் இன்ஸ்பெக்டர் விவரமாகத் தம் நண்பர் வரதனிடம் தெரிவித்தார். ''அன்றைக்குப் பரம யோக்கியன் போல வைரக் கல்லைக் கையால் தொடவே மறுத்து விட்டானே!'' என்று வரதன் தன் வியப்பைத் தெரிவித்தார்.

விற்பனையாகிறது!

அசட்டுப் பிச்சு

ஆர்வி எழுதியது

விலை 1 ரூபாய்தான்!

மானேஜர்-கண்ணன்-மயிலாப்பூர்-சென்னை-4.

பிறந்த இடமும் புகுந்த இடமும்

க. சண்முகசுந்தரம்

ஆழ்ந்த சிந்தனையிலிருந்த கமலம் தன் தோழி பொன்னம்மாள் வந்திருப்பதை நீண்ட நேரம் கழித்துத்தான் உணர்ந்தாள். பொன்னம்மாளும் தன் தோழியின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு சிறிது பொறுத்துப் பார்த்தாள். அடிக்கடி நீண்ட பெருமூச்சு விடுவதையும், கண்களினின்று நீர் தாரை தாரையாக வழிவதையும் கண்டு வியப்படைந்தாள். கமலத்துக்குத் திடீரென என்ன கவலை வந்துவிட்டது!

கமலமும் பொன்னம்மாளும் சிறு வயதிலிருந்தே இணை பிரியாத தோழிகள். பிறந்த இடமும் புகுந்த இடமும் செல்வாக்கும் செல்வமும் கொழிக்கும் இடங்கள். கணவனே மனைவி மனங்கோணுமல் நடப்பவன். ஆண் குழந்தை இல்லை என்ற குறையைத் தவிர வேறு குறையில்லை. ஆனல் ஒரே மகளைச் சீராட்டிப் பாராட்டிச் செல்வமாக வளர்த்து, இரண்டு வாரங்களுக்கு முன்புதான், கல்விச் செல்வமும், பொருட் செல்வமும், நல்ல குணமும், அழகும் பொருந்திய பையனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்கள். அகமும் முகமும் மலர, எப்பொழுதும் தன்னை வரவேற்கும் கமலம் இன்று சோர்ந்து போயிருக்கும் காரணத்தை அறிய ஆவல் கொண்டவளாய், அவளது தோளைப் பிடித்து உலுக்கி, ''கமலம்! ஏன் அழுகிருய்? உனக்கு என்ன கவலை?'' என்று அன்புடன் விசாரித்தாள். அதன் பிறகுதான் கமலத்திற்குச் சுய உணர்வு வந்தது.

''ஒன்றுமில்லையடி, திடீரென நமது கண்ணம்மாள் நினைவு வந்தது. அப்படியே சோர்ந்து உட்கார்ந்துவிட்டேன்.''

''கண்ணம்மாளுக்கு என்ன? கணவன் வீட்டிற்குச் சென்று பதினைந்து நாட்கள்தானே ஆகின்றன? உடல் நலக் குறைவு என்று ஏதாவது தகவல் வந்ததா?'' என ஆர்வத்துடனும் கவலையுடனும் கேட்டாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. பதினெட்டு ஆண்டுகளாக நம்மையே சுற்றிச் சுற்றி வந்த குழந்தை, வீட்டை விட்டுச் சென்றதிலிருந்து எனக்கு என்னவோபோல் இருக்கிறது. கைக் காரியம் செய்ய ஓடவில்லை. ஒரே பெண் என்பதற்காக, கண்ணை இமை காப்பதுபோல் எவ்வளவு சீரும் சிறப்புமாய் வளர்த்தேன்! புதிய இடத்தில் எப்படி இருக்கிருளோ? கண் நிறைந்த கணவன்தான் அவளுக்கு வாய்த்திருக்கிருன். ஆனல் குணம் எப்படியோ? பழகப் பழகவல்லவா தெரியும்! கண்ணம்மாள் இங்கு இருக்கும்பொழுது வீடு எத்தனை கலகலப்பாக இருந்தது! இப்பொழுது நானும் அவரும் மட்டும் கொட்டாவி விட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கவேண்டியிருக்கிறது. மன நிம்மதியே இல்லை. அவரிடம் கூறினல், 'போடி அசடே! மாப்பிள்ளை மிகவும் நல்லவன். நமது கண்மணியை நன்ருக வைத்துக் கொள்வான். அவளும் கணவனே தெய்வம் என அவனுக்கு ஏற்றபடி நடந்துகொள்வாள். நீ அந்தக் காலத்தில் எப்படி இருந்தாயாம்! நாள் முழுவதும் என்னைச் சுற்றிச் சுற்றிக்கொண்டே வரவில்லையா?' என்று பழைய காலச் சம்பவங்களையெல்லாம் கூறி, என்னைக் கேலி செய்கிருர். அவரோ ஆண்பிள்ளை. குழந்தையைப்பற்றிய நினைவே அவருக்கு வருவதில்லை. என்னல் அவ்வாறு இருக்க முடிகிறதா?'' என்று விவரித்துக் கூறி நீண்ட பெருமூச்செறிந்தாள்.

எல்லாவற்றையும் கேட்ட பொன்னம்மாள் இடி இடியெனச் சிரித்த பின்னர், ''பூ! இவ்வளவுதானு? என்னமோ, ஏதோ என

நான் பயந்து போனேன். இது அவசியமற்ற கவலையாச்சே! இருக்கட்டும். எனக்குச் சில சாமான்கள் வாங்கவேண்டியிருக்கிறது. உனது கவலையைச் சிறிது ஒதுக்கிவைத்து விட்டு என்னுடன் கடைத் தெருவுக்கு வருகிறாயா?'' என அன்புடன் வேண்டினாள். கமலமும் சம்மதித்தாள்.

இருவரும் கடைத் தெரு முழுவதையும் சுற்றினர். ஒரு கடையில் கூட்டம் நிறைந்திருந்தது. கம்மென்று வீசிய வாசனையால் சந்தனம் முதலிய வாசனைப் பொருள்கள் விற்கும் கடையென்று தெரிய வந்தது. கடையை நெருங்கிச் சென்றனர். பயில்வான் போன்ற ஒருவன், பெரிய சந்தனக்கட்டை ஒன்றைப் பெரிய கல்லில் வைத்துத் தன் பலம் கொண்டமட்டும் அரைத்துக்கொண் டிருந்தான். மற்றொருவன் அரைத்த சந்தனத்தை வழித்து, வாசனைத் திரவியங்களை அளவோடு சேர்த்துக் கலந்து, இலைகளில் கட்டிக் கட்டிப் பலருக்கும் விற்பனை செய்துகொண் டிருந்தான். பொன்னம்மாளும் எட்டணாவுக்குச் சந்தனம் வாங்கிக்கொண்டு, கமலத்துடன் திரும்பினாள்.

அடுத்திருந்த முத்துக்கள், பவழங்கள் விற்கும் கடையில் இருவரும் நுழைந்தனர். வெண் முத்துக்களாலாகிய மாலைகள் இரண்டு வாங்கி கமலத்திற்கு ஒரு மாலையைக் கொடுத்தாள். ''எனக்கு ஏதுக்கடி முத்து மாலையெல்லாம்!'' என மறுத்தாள் கமலம். ஆயினும் பொன்னம்மாளின் கண்டிப்பான கட்டளையை மறுக்க முடியாமல், கண்ணம்மாளுக்காவது உபயோகப் படட்டுமெனக் கருதி வாங்கி அணிந்துகொண்டாள்.

பிறகு தோழிகள் இருவரும் அடுத்திருந்த பூங்காவை அடைந்தனர். ''கமலம், இன்று ரேடியோவில் நல்ல வீணைக் கச்சேரி இருக்கிறது. அரை மணி நேரம் கேட்டு விட்டு வீட்டிற்குத் திரும்புவோம்'' என்றாள் பொன்னம்மாள். அங்கிருந்த புல் தரையில் இருவரும் அமர்ந்தனர். வீணைக் கச்சேரி துவங்கியது. வீணையின் நாதத்தைக் கேட்டதும் கமலத்திற்குத் தனது மகள் கண்ணம்மாளின் நினைவுதான் எழுந்தது. கண்ணம்மாள் சிறு குழந்தையாக இருந்த பொழுது நடந்த ஒரு நிகழ்ச்சி நினைவுத் திரைக்கு வந்தது. அன்றும் இதே போன்று ஒரு வீணைக் கச்சேரி ரேடியோவில் நடந்தது. கமலத்தின் கணவர் வீணையின் நாதத்தில் மனம் ஒன்றியிருந்தார். தட்டித் தடுமாறி நடந்துவந்த குழந்தை கண்ணம்மாள் தகப்பனார் சாய்ந்திருந்த சாய்வு நாற்காலியைப் பிடித்துக்கொண்டே தனது மழலை மொழியில், ''அப்பா, அப்பா! லேலியோ கேழ்க்கிறியா அப்பா! நான் லேலியோ மாதிரி பாடுவேனப்பா! கேளு'' எனக் கூறிக் கொண்டு கையையும் காலையும் ஆட்டி ஏதோ பாட ஆரம்பித்தாள். அவரோ குழந்தையின் மழலைப் பேச்சையே காதில் வாங்கிக்கொள்ளாமல் வீணையின் ஒலியில் மயங்கி இடையிடையே, ''ஆஹா, சபாஷ்'' போட்டுக்கொண்டிருந்தார். இதைக் கவனித்த கமலம் ஓடி வந்து, ''இதோ பாருங்கள், கண்ணம்மாள் பாடுவதை! குழந்தையின் பாட்டைக் கேட்காமல், என்ன ரேடியோ கேட்கிறீர்கள்?'' என்று தன் கணவனின் கவனத்தைக் குழந்தையின் மழலை மொழியில் திருப்பியதோ டல்லாமல் வள்ளுவரின்

''குழல் இனிது யாழ் இனிது
என்ப தம்மக்கள்
மழலைச் சொற் கேளா தவர்''

என்ற குறட்பாவையும் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தாள்.

இன்று கண்களை மூடிச் சிந்தனையில் இருந்த பொன்னம்மாளைக் கண்டதும், அவளும் வீணையின் நாதத்தில்தான் மயங்கியிருக்கிறாள் எனத் தவறாகக் கருதி, அவளுடைய அறியாமைக்காக மனத்திற்குள்ளேயே சிரித்துக்கொண்டாள். ஆனால், பொன்னம்மாளின் சிந்தனையோ, கட்டிக்கொடுத்த மகளையே நினைத்து நினைத்து ஏங்கும் தனது உயிர்த் தோழி கமலத்தை எவ்வாறு ஆற்றுவது என்ற யோசனையிலேயே இருந்தது.

பொன்னம்மாள் சிறிது தமிழ் இலக்கியங்கள் பயின்றவள். கற்றோர் ஏத்துங் கலித் தொகையைச் சமீபத்தில் படித்திருந்தாள். கலித்தொகையிலுள்ள ஒரு காட்சி அவளுடைய நினைவுக்கு வந்தது. அக்காட்சியையே பயன் படுத்தித் தனது தோழியை ஆற்ற விரும்பி, உரையாடத் தொடங்கினாள்.

கையில் வைத்திருந்த சந்தனப் பொட்டலத்தைக் காட்டி, ''கமலம், இந்தச் சந்தனம் எங்கிருந்து கிடைக்கிறது, தெரியுமா?'' எனக் கேட்டாள்.

''நல்ல கேள்வியடி! சற்று முன்பு தானே அதோ தெரியும் அந்தக் கடையிலிருந்து வாங்கி வந்தோம். அதற்குள்ளாக மறந்துவிட்டதா? என்ன அசட்டுத்தனமான கேள்வியெல்லாம் கேட்கிறாய்?''

''அம்மா கமலம்! நீ பெரிய கெட்டிக்காரி என்பதைச் சிறுபிள்ளையிலிருந்தே அறிவேன். இந்தச் சந்தனத்தின் பிறப்பிடம் எது என்று தான் கேட்டேன். எந்தக் கடையில் கிடைக்கிறது எனக் கேட்கவில்லை.''

''ஓ! அதைக் கேட்கிறாயா? மலைகளில்தான் சந்தன மரங்கள் உண்டாவதாகக் கூறுகிறார்கள். நமது குற்றால மலையில்கூட நிறையச் சந்தன மரங்கள் இருக்கின்றனவாம்.''

''ஆம். இந்தச் சந்தனம் மலையிலே பிறந்தாலும் மலைக்கு அதனால் ஏதாவது பயன் உண்டா? முற்றிய மரத்தை வெட்டிக் கொணர்ந்து, நன்றாய் அரைத்து மேலே பூசிக் கொள்கிறவர்களுக்குத்தானே, நல்ல நறு மணத்தையும் குளிர்ச்சியையும் அளிக்கிறது? நன்றாகச் சிந்தித்துப் பார்த்தாயானால் இதிலிருந்து ஓர் உண்மை புலப்படும். நீ சதா நினைந்து கவலைப்படும் உனது மகளும் பிறந்த இடமாகிய உனக்குப் பயன்பட மாட்டாள். தக்க பருவம் வரும்

வரை காப்பாற்ற வேண்டியதுதான் உனது கடமை. பிறகு அவள் தன்னுடைய கணவனுக்குத் தான் பயன்படுவாள். இதோ, இந்த முத்தை எடுத்துக்கொள். இந்த வெள்ளிய முத்துக்கள் கடலில் பிறக்கின்றன என்பதை நீ அறிவாய். கடலிற் பிறந்தாலும், அக்கடலுக்கு என்ன பயன்? மாலையாகக் கோத்து அணிபவர்களுக்குத் தானே பயன் தருகிறது? அது போன்றே இப்பொழுது நாம் கேட்டுக்கொண் டிருக்கும் யாழின் இசையும். அந்த இசையானது கேட்பவர்களுக்கு இனிமையைத் தருவதல்லாது அது பிறந்த இடமான யாழுக்கு என்ன பயனைக் கொடுக்கும்? ஆதலால் மகளைப் பிரிந்து விட்டோமெனச் சற்றும் கவலை கொள்ளாதே! மலையும், கடலும், யாழும் தம்மிடம் பிறந்த சந்தனம், முத்து, இசை முதலியன தமக்குப் பயன்படவில்லையென வருந்துவதில்லை. இனியாவது கவலையை விட்டொழி. அந்த அந்தப் பருவத்தில் அவரவர்கள் இருக்கும் இடத்தில் இருந்தால்தான் சிறப்பு. புகுந்த இடத்திலிருந்துகொண்டு, பிறந்தகத்தைப் பற்றி எண்ணி அவள் ஏங்கிக்கொண் டிருப்பதிலும் பயனில்லை. உனது மகள் கண்ணம்மாள் நல்ல அறிவாளி. திருக்குறள், சங்க இலக்கியங்கள் முதலானவற்றை நன்கு கற்றவள். மனைத் தக்க மாண்புடையவளாய், கணவன் மனம் கோணுதவாறு நடந்து நன்மைகளைப் பெற்று நீடூழி வாழ்வாள். கவலையை அறவே விடு'' என ஆறுதலும் தேறுதலும் கூறினாள். கமலமும் தோழியின் அறிவுரைகளிலுள்ள உண்மையை உணர்ந்து ஆறுதலடைந்தாள்.

அந்த ஆண்டு இறுதியில் தனது பேரனின் பொக்கை வாய்ச் சிரிப்பில் தன்னை மறந்து லயித்திருந்த கமலத்தை, தோழி பொன்னம்மாள்தான் மீண்டும் இவ்வுலக நினைவிற்குக் கொண்டுவர வேண்டியிருந்தது.

பொன்னம்மாள் பயன்படுத்திய 'கலித்தொகை' அடிகளை மட்டும் நாமும் நினைவு கூர்வோம்:

கோபால்: டேய் மது, நீயும் தஞ்சாவூரில் பிருகதீசுவரர் கோவிலுக்கு வந்திருந்தாயே, அங்கே உனக்கு எது ரொம்பவும் பிடிச்சிருக்கிறது.

மது: டேய், எல்லாவற்றையும் விட முதல் கோபுர வாசலில், நெய்யிலே வறுத்த முந்திரிப் பருப்பு வைத்திருந்தானே, அதுதான் ரொம்பப் பிடிச்சிருந்தது!

—த. ஜயந்தி, குளித்தலை.

''பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென் செய்யும்
நினையுங்கால் நும் மகள் நுமக்கு மாங்கனையளே;
சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளேபிறப்பினும் நீர்க்கவைதா மென் செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்கு மாங்கனையளே;
ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினு யாழ்க்கவைதா மென்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்கு மாங்கனையளே!''

3 குருடர்கள்

பித்துக்குளி

பிச்சைக்காரர்களிடம் இரக்கம் காட்ட வேண்டும் என்பது நல்ல யோசனைதான். ஆனால் எந்தப் பிச்சைக்காரர்களிடம் என்பது தான் கேள்வி.

இக்காலத்தில் பிச்சைக்காரர்களில் பல விதம் தோன்றியிருப்பதால்தான் இந்தப் பிரச்னையே எழுந்தது என்று சொல்லலாம்.

"குருடன் சாமி! ரெண்டு கண்களும் தெரியாது சாமி!" என்பார்கள். இவர்களிடம் ஒரு தேய்ந்த காலணாவை வேண்டுமென்றே போட்டுப் பாருங்கள். "என்ன சாமி, செல்லாக் காசைப் போடறே?" என்று நம்மையே கேட்பார்கள்.

நொண்டி என்பான். நாம் பார்க்காதிருக்கும்போது ஓட்டத்தில் நம்மையும் மிஞ்சி விடுவான்! காக்காய் வலிப்புக்காரன் ஒருவன் இன்னொருவனிடம் 'குஸ்தி' போட்டதை நான் கண்டிருக்கிறேன்!

இப்படியெல்லாம் இருப்பதால்தான் சேகர், சமயத்தில் அவனிடம் மீதியிருக்கும் காலணா அரையணாவைக்கூடத் தருமம் செய்யத் தயங்குவான்.

சேகர் இருக்கும் தெருவில் நீண்ட நாட்களாக மூன்று குருடர்கள் நிரந்தரமாகக் குடியேறி இருந்தார்கள். அம் மூவரும் ஒன்று சேர்ந்தே பிச்சைக்குக் கிளம்புவார்கள். ஒன்றாகவே 'தொழிலை' நடத்துவார்கள். ஒருவன் பாடுவான். மற்ற இருவரும் அவன் பாடுவதை வாங்கிப் பாடுவார்கள்.

'இம்மூவரும் உண்மைக் குருடர்களா அல்லது பிறரைப் போல் வேஷமா!' என்று சேகருக்கு அடிக்கடி சந்தேகம் எழும். இவர்களைச் சோதித்துவிட வேண்டும் என்று வெகு நாளாக ஆவல் சேகருக்கு.

ஒரு நாள் மத்தியானம் மூன்று குருடர்களும் தெருக்கோடியில் வருகிறார்களென்று அவர்கள் பாடியதைக் கொண்டு தெரிந்துகொண்டான் சேகர்.

அவன் திட்டமும் உருவாகியிருந்தது மனத்திற்குள்.

வழக்கம்போல் மூன்று குருடர்களும் அவன் வீட்டிற்கு வந்ததும், "இந்தாருங்கள் ஒரு ரூபாய்! இன்றாவது வயிறு நிரம்ப உண்ணுங்கள்" என்று மிகவும் இரக்கப்படுவது போல் நடித்து, அவர்களிடம் ஒரு ரூபாயை ஓசைப்படுத்திக் காட்டினான்.

மூவரும் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டனர். பதினைந்து தடவைகள் விடாமல் அவ்வூரைச் சுற்றினாலும் அரை வயிற்றுக்குக் கிடைக்காத அவர்களுக்கு ஒரு விநாடியில் முழுசாக ஒரு ரூபாய் கிடைத்தது என்றால் அவர்களுக்கு எப்படி இருக்கும்!

"சாமி! மகராசனாயிருக்கணும். கடவுள் உங்களை என்றும் காப்பார்" என்றெல்லாம் வாழ்த்தினர்.

பிறகு மூவரும் கடைத் தெருவிலிருக்கும் போஜனசாலையை நோக்கி மகிழ்ச்சியுடன் நடந்தார்கள்.

அந்த ஒரு ரூபாயைக் கொண்டு அன்று மூவரும் வயிறு நிறைய உண்டு களிக்கவேண்டும் என்பது அவர்கள் தீர்மானம்.

சேகரும் அவர்களைத் தொடர்ந்தான்.

தட்டித் தடுமாறி போஜனசாலையை அடைந்ததும் குருடர்களில் ஒருவன், "எசமான், மூன்று பேருக்கும் மூன்று சாப்பாடு கொண்டுவரச் சொல்லுங்கள்" என்றான் சற்று அதிகாரத்துடன்.

முதலாளி முறைத்துப் பார்த்துவிட்டு, "காசு வைத்திருக்கிறீர்களாடா?" என்று கேட்டார்.

"ஒரு ரூபா இருக்கு சாமி!" என்று ஏககாலத்தில் மூவரும் கூறினார்கள்.

"ஒரு ரூபாய்க்கா மூன்று சாப்பாடு.......?" என்று முணுமுணுத்தவர் சற்று யோசித்துவிட்டு, "சரி சரி, மீதி தருமம்" என்று கூறிவிட்டு, உள்பக்கம் திரும்பி மூன்று சாப்பாடுகள் கொண்டு வரும்படி உத்தரவிட்டார்.

மூன்று குருடர்களும் தங்கள் மூட்டை முடிச்சுகளை ஒருபுறமாக வைத்துவிட்டு உட்கார்ந்துகொண்டார்கள்.

உணவு வந்தது.

ஒரு வருஷம் கொள்ளே கண்டிராத குதிரையைப் போல் ஆவலுடன் மூவரும் வயிறு நிறையச் சாப்பிட்டார்கள். முதலாளியும் ஏதோ ஒரு ரூபாயாவது கொடுக்கிறார்களே என்ற திருப்தியில் நிறைய வஞ்சனை இல்லாமல் உணவு அளிக்கச் செய்தார்.

சாப்பாடு முடிந்ததும் குருடர்களில் ஒருவன், "டேய் வெள்ளை, ரூபாயைக் குடுத்துடுடா" என்று கேட்டுக்கொண்டான். அவன் இன்னொருவனைப் பார்த்து, "டேய் வீரா, பணத்தை எடுடா" என்றான். வீரன் திகைத்தான். "என்னிடம் ஏதுடா காசு! உன்னிடம்தானேடா குடுத்தாரு?" என்று வீரன் வெள்ளையைக் காட்ட, வெள்ளை வீரனைக் காட்ட இப்படி ஒருவருக்கொருவர் சண்டை யிட்டுக்கொண்டார்கள்.

"ஏண்டா பயல்களா? இம்மாதிரி எத்தனை பேர் கிளம்பியிருக்கிறீர்கள், பட்டப் பகலிலேயே ஆட்களை ஏமாற்ற? உங்களிடமெல்லாம் முதலிலேயே துட்டைக் கழற்றி இருக்க வேண்டும். குருடர்களாயிற்றே என்று இரங்கப் போய்......" அவர் வாக்கியத்தை முடிக்கவில்லை. உள்

பக்கம் திரும்பி, "டேய் கிட்டு, எடுத்தாடா அந்தக் கரண்டியை! இந்தப் பயல்களை சும்மா விட்டுட்டா நாளைக்கு இன்னொருத்தனை ஏமாற்றத் தயங்கமாட்டார்கள்" என்று கூச்சல் போட்டார்.

"சாமி! எசமான்! நாங்க ஏமாத்தலீங்க. யாரோ ஒரு மவராசன் இந்தாங்கடா ஒரு ரூபான்னு சொன்னுரு. நான் அவன் வாங்கிட்டான்னு இருந்தேன். அவன் இன்னொருவன் வாங்கிட்டான்னு இருந்திருக்கான். இப்படி கண்ணு தெரியாதவர்களை யாரோ ஏமாத்திப்பிட்டாங்க, சாமி" என்று கதறினன் அவர்களில் தலைமைக் குருடன்.

இனியும் தன் சோதனையை நீடிக்க விரும்பாத சேகர், போஜன சாலைக்குள் நுழைந்தான்.

முதலாளியிடம் விவரத்தைச் சொல்லி, "நான்தான் இவர்கள் உண்மைக் குருடர்களா அல்லது நடிக்கிறார்களா என்று பரீட்சித்துப் பார்க்க எண்ணி இப்படிச் செய்தேன். 'இந்தாங்கடா ஒரு ரூபாய்' என்றதும் மூவரும் கையை நீட்டினர். நான் வாயால் சொன்னேனே தவிர அவர்களிடம் ஒன்றும் கொடுக்கவில்லை! அவர்கள் உண்மைக் குருடர்களாகையால், நான் ரூபாய் கொடுத்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்துவிட்டனர். அதன் பின்தான் இப்படி........." என்று முடித்து ஒரு ரூபாயை முதலாளியிடம் கொடுத்தான்.

குருடர்கள் மூவரும் கையெடுத்துக் கும்பிட்டனர். போஜனசாலை முதலாளியும் சேகரை வாழ்த்தினர்.

அருமையான சம்பவம்

பள்ளிக்கூடத்திற்காக அவசரப் படுத்தினேன் அம்மாவை. "நான் என்னடா செய்யட்டும்! அப்பாவுக்கு ஆபீஸுக்கு நேரமாகிவிட்டது. காபிக்கு ஜீனி இல்லாததால் இருந்ததை அவருக்குப் போட்டுக் கொடுத்துவிட்டேன். பால் அடுப்பில் காய்ந்துகொண்டிருக்கிறது. ஆகையால் இப்பொழுது அப்பாவிடம் போய் இரண்டணு வாங்கிச் சென்று ஜீனி வாங்கிக் கொண்டு ஓடி வா!" என்றாள்.

நான் அப்பாவிடம் போய்க் கேட்டு இரண்டணுவை வாங்கிக்கொண்டு மூப்பனார் கடையை நோக்கிப் பறந்தேன்.

அவர் கடையின் முன்னல் மூட்டையில் ஜீனி இருந்தது. மூப்பனார் வேறு ஏதோ வியாபாரத்தில் குறியாயிருந்தார். அவர் அந்தப் பக்கம் திரும்பினர். அவ்வளவுதான், இரண்டு கை நிறைய ஜீனியை வாரி எடுத்துப் பையை நிரப்பிக்கொண்டு பறந்தேன். வீட்டிற்குப் போகும் வழியில் காகிதத்தில் அழகாக மடித்து விலைக்கு வாங்கி வந்ததுபோல் அம்மாவிடம் கொடுத்துவிட்டேன்.

அம்மா அந்த ஜீனியைப் போட்டுக் காபியைக் கலந்து கொடுத்தாள். அதை ஒரு வாய் குடித்தேனே இல்லையோ, உடனே குடலைக் குமட்டக் கொப்புளித்துவிட்டேன். அம்மாவிடம் மாட்டிக்கொண்டு உள்ளதைச் சொல்லிவிட்டேன். அப்பொழுதுதான் அம்மா மூட்டையில் இருந்தது வயலுக்குப் போடும் உப்பு என்று சொன்னாள். நான் அந்த உப்பு ஜீனி போல் இருந்ததால் கொண்டு வந்துவிட்டேன். ஏமாற்றிய இரண்டணுவையும் அம்மா வாங்கிக்கொள்ள அசடு வழியப் பசியோடு பள்ளிக்குச் சென்றேன்.

—பி. எல். கணேசன், தேவகோட்டை.



மின்சார ஹார்ன்

ஈ. ஜி. என்.

வீட்டு வாசலில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ராஜனுடைய கவனத்தை ஒரு புதிய சப்தம் கவர்ந்தது. தெருவில் சென்றுகொண்டிருந்த ஒரு சைக்கிளின் ஹாண்டிலில் பொருத்தப் பட்டிருந்த ஒரு 'ஹார்ன்'தான் அந்தச் சப்தத்தை உண்டாக்கியது. அந்த மாதிரி ஒன்று செய்து பார்க்க விரும்பிய ராஜன் மாமாவின் வீட்டை அடைந்தான். அதைச் செய்ய அவர் சில சாமான்களைக் கொண்டுவரும்படி சொன்னார். அவை பின்வருமாறு:—

(1) 4 அங். சதுரமான ஒரு பலகை.

(2) 3 அங். உயரமுள்ள ஒரு 1 அங். சதுரப் பலகை.

(3) $1\frac{1}{2}$ அங். நீளமுள்ள திருகு ஆணி (Screw Nail)

(4) $1\frac{1}{2}$ அங். அகலமும் 4 அங். நீளமுமுள்ள தகரத் தகடு.

(5) 4 அங். 5 அங், அளவுள்ள ஒரு (Plywood) பலகை.

(6) 28. S. W. G. வார்னிஷ் கம்பி (சுமார் 5 அடி நீளம்)

(7) காகிதம் (Brown Paper), பாட்டரி, ஆணிகள் முதலியவை.

சதுரமான பலகையில் 3 அங். உயரமுள்ள கட்டையைச் செங்குத்தாக நிறுத்தி ஆணியினால் பொருத்தினார். அதன் மேல்முனையிலிருந்து $\frac{1}{2}$ அங். உயரம் விட்டு அதில் $1\frac{1}{2}$ அங். நீளமுள்ள திருகு ஆணியைப் படத்தில் காட்டியபடி (படம் 1) பொருத்தி முறுக்கி வைத்து விட்டார். அந்த ஆணியில் வார்னிஷ் கம்பியைச் சுற்றி அதை மின்சார காந்தமாகச் செய்துவைத்தார். படம் 2. ஆணியின் முனையிலிருந்து சிறிது இடம் விட்டு, செங்குத்தாக நிற்கும்படி ஒரு தகரத் தகட்டைப் படத்தில்



காட்டியபடி சிறிய ஆணிகளால் கீழ்ப் பலகையுடன் பொருத்திஞர். தகரத்தகடு ஆணியில் படாமலும், அதிகத் தூரத்திலில்லாதபடியும் செய்து வைத்தார். வார்னிஷ் கம்பியின் ஒரு முனையைச் சுத்தம் செய்து தகரத் தகட்டை லேசாகத் தொட்டுக்கொண் டிருக்கும்படி அமைத்தார். படம் 3. தகட்டின்மேல் ஆணிக்கு எதிர்ப்புறமாக ஒரு குச்சியை (2 அங் நீளம்) அரக்கின் உதவியால் ஒட்டவைத்தார். படம் 4. அரக்கிஞல் பொருத்தமுடியாவிட்டால் சிறிய இரும்புக் கம்பியைத் தகட்டுடன் ஈயத்திஞல் ஒட்டவைத்துவிடலாம்.

(Plywood) பலகையின் 5 அங். உயரத்தில் 1 அங். விட்டு மிகுதியுள்ள பகுதியில் சுமார் 3 அங். குறுக்களவுள்ள ஒரு வட்டம் வரைந்து அதை அறுத்து எடுத்துவிட்டார். அந்த வட்டத்தின் மேல் தடித்த காகிதத்தை ஒட்டி விட்டு, அந்தப் பலகையை முன்ஞல் தயார் செய்த பலகையில் படத்தில் காட்டியபடி பொருத்திவிட்டார். படம் 5. தகரத்திலிருந்து பொருத்தப்பட்ட குச்சியைக் காகிதத்தின் நடுவில் அவர் பிணைத்துவிட்டார். பிறகு தடித்த காகிதத்தால் ஒரு குழாய் செய்து அதை வட்டமாக ஒட்டப்பட்ட காகிதத்திற்கு மேல் படத்தில் காட்டியபடி ஒட்டிவிட்டார். தகரத்தின் அடிப்பாகத்தில் ஒரு கம்பியைப் பிணைத்து அதையும், மின்சார காந்தமாக்க வேண்டிய ஆணியின் மேல் சுற்றப்பட்ட கம்பியின் முனையையும் பாட்டரியுடன் பிணைத்தார். தகடு வேகமாக அதிர்ந்து சைக்கிள் ஹார்ன் போன்ற சப்தம் கிளம்பியது. ராஜன் அதை எடுத்துக்கொண்டு குஷியுடன் வீட்டிற்குத் திரும்பிஞன்.



எங்கள் பகுதி

* குறை நீங்குமா?

15-4-55 இதழ் அட்டைப் படம் நன்றாக இருக்கிறது.
பேப்பர் படிக்கச் சந்தர்ப்பம் இல்லாதவர்களுக்கு மிகவும் பயனுள்ள பகுதி 'செய்திகள்.'

அதிருஷ்ட நம்பரைப் பார்த்தேன். அதில் என் நம்பர் இல்லை. அதற்காக நான் கவலைப்படவில்லை. எப்பொழுதாவது அதிருஷ்ட நம்பர் உள்ள கண்ணன் என்னிடம் வராமலா போவான்?

லீடர் மணியும், பாரஸீக ரோஜாவும் ஜாம் ஜாம் என்று விறு விறுப்பு நடை போட்டுக்கொண்டு முன்னேறுவதை நான் எழுதத் தேவையில்லை.

'கேளுங்கள் சொல்லுகிறேன்' என் போன்ற மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள பாடப் பகுதி.

மறைந்த மோதிரம் நல்ல துப்பறியும் சிறுகதை. 'மேன்மை உள்ளம்' என் மனதைக் கவர்ந்த கதை. ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டது.

'கணக்கு விவகாரத்தைப் படிக்கப் படிக்க சிரிப்புதான் வருகிறது.

'விலை' அப்படியே காப்பி. 'வெகுமதி'யும் ஆரம்பத்திலும் முடிவிலும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆசிரியர் என்ன செய்ய முடியும்? ஆகவே இனி நண்பர்கள் இது மாதிரி கதைகள் எழுத மாட்டார்கள் என எண்ணுவதில் தவறுண்டா?

—எஸ். மாடசாமி, திருச்சி.

நவரத்தினங்கள்

ஒவ்வொரு வனத்திலும் சந்தன மரங்கள் இருப்பதில்லை; அப்படியே ஒவ்வொரு சர்ப்பத்தின் தலையிலும் ரத்னம் இருப்பதில்லை.

ஆனால் ஒவ்வொரு 'கண்ணன்' இதழிலும் பின் வருபவை இருக்கத்தான் இருக்கின்றன! அவை ஒன்று இரண்டல்ல; நவரத்தினங்கள்!

1. எங்கள் சிறிய அறிவிற்குச் சிறந்த பொக்கிஷமாக இருக்கும் செய்திகள்.
2. மனத்தை மலைக்க வைக்கும் முழு நீளத் தொடர்கதை.
3. அற்புதக் கவிஞர்களின் அன்புப் பாட்டு.
4. கேட்போர் கேள்விகளுக்குக் கேலி செய்யாது பதிலளிக்கும் பகுதி.
5. பாரபட்சமின்றிப் பதிப்பில் வரும் பாலர்களின் பாட்டு.
6. சிரிக்க வைக்கும் சிறப்பான நாடகங்கள்.
7. உள்ளத்தைத் தொடும் உருக்கமான கதைகள்.
8. படிப்போரைப் பிரமிக்க வைக்கும் 'பாரசீக ரோஜா'.
9. எங்கள் எண்ணங்களை—எதுவாக இருந்தாலும்—ஏற்கும் எங்கள் பகுதி.

காகம் கரையாமலிருக்கலாம்; கதிரவன் கிளம்பாமலிருக்கலாம்; ஆனால் கண்ணனில் இவை வந்தே தீரும்!

'கண்ணன்' சிறப்பெய்தி வாழவேண்டும்!

கே. சாரங்கராஜன், பம்பாய் - 19.

---

* 3 ரூ. பரிசு பெற்ற கடிதம்.

விடி வெள்ளி

அட்டைப் படம் நல்ல கவர்ச்சியாயும் அதே சமயத்தில் குழந்தைகளுக்கு உகந்ததாயும் இருக்கிறது. இதுவரை சாரணர் இயக்கத்தில் சேராத மாணவர்கள் இந்தப் படத்தைப் பார்த்தாவது நிச்சயம் சேருவார்கள் என்று நம்புகிறேன்.

செய்திப் பகுதியில் எல்லாம் பிரயோஜனமான செய்திகளே. அதிருஷ்ட எண்கள் பரிசுத் திட்டம் குழந்தைப் பத்திரிகை உலகுக்கு ரொம்ப ரொம்பப் புதுமையானது. மாதம் இருபது பேருக்குக் கட்டணம் எதுவுமின்றி ரொக்கப் பரிசு தருவது எவ்வளவு சிரமமான காரியம்! கண்ணனுக்கு என் பாராட்டுக்கள்.

ஜோதி மாமாவின் 'புதிய வருஷம்' கவிதை இந்தப் புது வருஷத்துக்கே சிறப்பைத் தருகிறது. லீடர் மணி கதை உலகின் எவரெஸ்ட்! மணியைக் கதாபாத்திரமாக வைத்து உலக மகா காவியங்களிலுள்ள சோக ரஸத்தையெல்லாம் பிழிந்து தம் பேனு மூலம் சொட்டுகிருர் ஸ்ரீ ஆர்வி. பாரசீக ரோஜா சுவாரஸ்யமாகச் செல்லுகிறது. "இந்தக் காலத்தில் யாரை நம்ப முடிகிறது?" என்கிருர்களே, அதற்கு நல்ல உதாரணமாக அமைந்திருக்கிறது மறைந்த மோதிரம். பாலர் கவி அரங்கம் பயன் தரும் பகுதி. ஆனுல் பெண்கள் ஏன் அதிகமாக எழுதுவதில்லே?

பட்டுப் பாவாடை ரசனேயுள்ள கதை. வெகுமதி பெறுமதியான கதை. 'ஆசையால் அவஸ்தை கிடைக்கும். உண்மை அன்பால் உயர்வு கிடைக்கும்' என்பதை விளக்குகிறது.

டயரி சொல்லும் கதை உருக்கமாக அமைந்திருக்கிறது. கடைசியிலாவது சித்தியின் பெருமையை உணர்ந்தானே! கணக்கு விவகாரம் தினசரி வீட்டில் நடக்கக்கூடியதுதான். 'உனக்குத் தெரியுமா?' பகுதிக்கு நல்ல வரவேற்பிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?

குழந்தை இலக்கிய வானில் ஓர் விடி வெள்ளியாகத் திகழும் கண்ணன் வாழ்க!

—'ராஜு', கள்ளிக்குளம்.

கண்ணனேப் பார், தம்பி!

1. கண்ணனே வாங்கியே தம்பி - நீ
 கவனமாய்ப் படித்துப்பார் தம்பி!
2. எண்ணத்தை இழுத்திடும் அட்டை - நல்ல
 வண்ணம் மிகுந்ததுகாண் தம்பி!
3. கருத்தைக் கவர்ந்திடும் கதைகள் - அதைநீ
 பொறுத்துப் படித்திடணும் தம்பி!
4. நிறுத்துக் கொடுப்பதைப் போலே - அதில்
 நியாயக் கருத்துக்கள் உண்டு!
5. அர்த்தம் பொதிந்ததமிழ்ப் பாடல் - உனக்கு
 அற்புத விருந்தாகும் தம்பி!
6. விலேயும் மிகக்குறைவு தம்பி - நீ
 விரைந்துகொடு இரண்டணுவைத் தம்பி!
7. தரத்தில் மிகவுயர்ந்த கண்ணன் - உனது
 கரத்தில் மிளிர்ந்திடும்காண் தம்பி!
8. சிரிக்க வைத்திடுமே தம்பி - உன்னேயது
 சிந்திக்கத் தூண்டிடுமே தம்பி!
9. அறிவை வளர்த்திடுமே தம்பி - அதனே நீ
 அவசியம் படிக்கவேண்டும் தம்பி!
10. உண்மையை உரைத்திட்டேன் தம்பி - கண்ணனே நீ
 ஓடிப்போய் வாங்கிப்பார் தம்பி!

—பரசுராமன், பாபநாசம்.

அதோ இளவரசர்! நீங்கள் போங்கள்!
அப்படியே
இளவரசே! கனவில் கண்ட ராஜகுமாரி அனுப்பியிருக்கிறாள்!
என்ன? உன்னையா அனுப்பினாள்? உண்மையா?
ஆம், இளவரசே!
பொய் சொல்லாதே! தலையை வாங்கிவிடுவேன்
இதோ! நீங்கள் அவள் கையிலிட்ட மோதிரம்! போதுமா அத்தாட்சி?
நண்பா! அவள் எங்கே இருக்கிறாள்? என்ன செய்கிறாள்? சொல் உடனே!
அவசரப்படுகிறீர்களே! எல்லாம் சொல்லத்தானே வந்திருக்கிறேன்!
நண்பா! உன் உதவியை நான் மறக்கமாட்டேன்!

மர்ஜாமன் தன் தங்கை பூதூரைப் பார்த்ததிலிருந்து இது வரை நடந்ததெல்லாம் கூறி முடித்தான். பூதூரும் இதே போல் ....
அண்ணு! நீதான் எனக்கு உதவி செய்ய வேண்டும்!
பூதூர்! உன் கனவில் வந்த இளவரசை நான் எப்படியும் தேடி வருகிறேன். கவலைப்படாதே!
இந்தா! இது தான் அவருடைய மோதிரம்!
ஆகா! நண்பா! உடனே உன் தங்கையிடம் என்னை அழைத்துப் போ!
பொறுங்கள்! நான் சொல்கிறபடி கேட்டால்...
காமர் அப்படியே செய்வதாக வாக்களிக்கவே, உடல் நோய் தீர்ந்து விட்டது என்று கலிபா அறிந்து மகிழும்படி நடந்து கொள்ள வேண்டும் என்று மர்ஜாமன் கூறினுன். காமர் அவ்விதமே நடந்து கொண்டான்.
சபாஷ்! மந்திரி! மகனுடைய நோயைத் தீர்த்த மர்ஜாமனுக்குப் பரிசுகளை அள்ளி அள்ளிக் கொடு. நாட்டு மக்களுக்கும் வாரி வாரி வழங்கு
தங்கள் சித்தம்
நண்பா! நாட்கள் ஓடுகின்றன! பூதூரை எப்போது பார்ப்பது?
இளவரசே! நாம் வேட்டைக்குப் போகலாம், வர நாளாகும் என்று சொல்லிப் புறப்படுங்கள்.
நீங்கள் தனியே போவது கூடாது! நம் வீரர்கள் கூட வருவார்கள்!
வேட்டைக்குச் சகல ஏற்பாடுகளும் தயார்!

(தொடரும்

வேதாந்தி?

குடந்தை ராமபத்ரன்

என்ன இந்த உலகமெனக்கு ஒண்ணும் பிடிக்கல்லே!
எதைக் கண்டாலும் வெறுக்கு தெந்தன் மனசு சரியில்லே!
படுத்து நல்லா உறக்கம் கொள்ளத் தூக்கமும் வல்லே!
பசித்து நல்லா உணவு கொள்ளப் பட்சமும் இல்லே.

'பார்க்' கிலே உட் கார்ந்தும் உள்ளத் துயரம் தீரல்லே!
பாட்டைக் கேட்டுக் கூட எந்தன் இதயம் மாறல்லே!
"'எதற்கு இந்தச் சோகம்?'' என்று அம்மா கேட்கிருள்.
"இடித்த புளி மாதிரி'ன்னு அப்பா திட்டுருர்.

பள்ளிக்கூடம் சென்று வரும் எண்ணம் தோணல்லே!
படிப்பதெல்லாம் மனசில் நல்லாப் பதிஞ்சு நிக்கல்லே
துள்ளித் திரிந்து ஓடிவிளை யாட முடியல்லே!
துயரம் நீங்க வழியை எண்ணி முடிவு காணல்லே.

சிரித்துப் பேசி மகிழ்ந்ததெல்லாம் எங்கேயோ போச்சு;
சிந்தனையில் ஆழ்ந்து உள்ளம் தவித் திடலாச்சு;
பெருத்த பாரம் ஏதோ மனசில் அழுத்திடலாச்சு
பேயறைந்த முகத்தைப் போல மாறிடலாச்சு.

கண்டால் கூட யாருடனும் பேசப் பிடிக்கல்லே!
கவலைதீர நல்லதொரு மார்க்கம் தோணல்லே!
''ஏண்டா! உனக் கென்ன?'' என்று கேட்டிடுவீங்க,
வேண்டா வெறுப்பாய் உங்களுக்குச் சொல்லித் தொலைக்கிறேன்;

எல்லாம் எங்க அப்பாவாலே வந்த வினைதான்!
இனிமேல் என்றும் 'கிரிக்கட் ப்ளே' நான் ஆடக் கூடாதாம்.
என்னால் இதனைப் பொறுத்துக் கொண்டு இருக்க முடியுமோ?
இனியும் இந்த உலகத்தில் நான் வாழ முடியுமோ!

லீடர் மணி

'ஆர்வி'

எதிரே நின்ற முரட்டு மனிதனைப் பார்த்ததும் மணிக்கு அச்சம் உண்டாயிற்று. அந்த மனிதனுடைய புதர் மீசையும் பூத விழிகளும் பார்க்கவே பயங்கரமாக இருந்தன. இடுப்பிலே சாதாரண வேஷ்டியும் மேலே காக்கிச் சட்டையும் அணிந்த அந்த முரட்டு மனிதன் போலீஸ் சேவகனாக இருப்பானோ என்ற சந்தேகத்தைக் கொடுத்தன.

''யார் நீ, உன் பேரென்ன? ஹைறங்?'' என்று அந்தப் புதர் மீசைக்குள்ளிருந்து கர்ஜனைக் குரல் வெளிவந்தது.

''என் பேர்..என் பேர்.. வந்து..முராரி!''

மணிக்கு அந்த ரேடியோ நாடகத்திலே வந்த முராரியேதான் நினைவு. தன் பெயர் மணி என்பதே மறந்து போயிருந்தது.

''எது—முராரிதானே?''

பூத விழிகள் ஒரு வட்டமடித்தன. டப்பாவில் கற்களைப் போட்டு உருட்டுவதுபோல் தொண்டையிலிருந்து கடகடவென்று ரவை புரண்டது. தூரத்திலிருந்து கேட்கும் இடியென அடி வயிற்றிலிருந்து சிரிப்புக் கிளம்பி படபடவென்று வெடித்தது.

மணி கண்களை மூடிக்கொண்டு விட்டான்.

''இங்கே வந்து ஏன் படுத்திருக்கே? ஹைறங்?''

மணி வாயைத் திறக்கவில்லை; கண்களையும் திறக்கவில்லை.

''இந்நேரத்துக்குமேலே இந்தப் பார்க்கிலே என்ன வேலை? ஹைறங்?''

மணியின் கைகள் இரண்டையும் அவனுடைய முரட்டுக் கை பற்றிக் கொண்டது. மணி கண்களை இன்னும் இறுக மூடிக்கொண்டான்.

''நீ வீட்டைவிட்டு யாருக்கும் தெரியாமல்தானே ஓடி வந்திருக்கே? ஹைறங்?''

''ஆ..மா..ம்..''

''ஹைறங்? ஆ..மா..ம்! எத்தினி நாளாச்சு வீட்டைவிட்டுக் கிளம்பி?''

''ஒரு வாரம், பத்து நாள் இருக்கும்!''

''ஹைறங்..பத்து நாள்!'' என்று அந்த மனிதன் தூக்கிவாரிப் போட்டதுபோல் துள்ளிக் குதித்தான். மணி லேசாகக் கண்ணைத் திறந்து பார்த்தான். அந்த முரட்டு மனிதன் காக்கிச் சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துப் பார்ப்பது தெரிந்தது. விழிதான் பெரிதே ஒழிய அந்த வெளிச்சம் அதற்குப் போதவில்லை. உடனே அதை மடித்துப் பைக்குள் வைத்துக்கொண்டு, ''உன் வயசு என்ன? ஹைறங்?'' என்றான்.

''பத்து.''

''ஹைறங்..பத்து? பத்து தானே?''

''ஆமாம்..''

''பஸ்ட் பாரம்தானே படிக்கிறே?''

''உக்கும்..''

"உம் பேரு என்ன சொன்னே? முராரி! அதானே? ஹைங்?"

"அது வந்து..அது வந்து..என் பேரு இல்லே..நான் வேறே ஏதோ ஞாபகமாய்.."

"டேய்! மாத்தாதே பேரை! அதுக்குள்ளே மறைக்கப் பாக்கறியே! உனக்கு வயசு போதுமா? முளேச்சு முளேவிடல்லே, துணிச்சலேப் பாத்தியா?"

"நிஜமா.."

"சட்! நிறுத்து பேச்சை! பேசாதே!"

மணி கப்பென்று பேச்சை நிறுத்திக்கொண்டான். அந்த முரட்டு மனிதன்தான் பேசிளுலும் மிரட்டுகிருன்; பேசாமலிருந்தாலும் மிரட்டுகிருனே!

"டேய், என்ன வாயை மூடிக்கிட்டே? ஹைங்?"

மணிக்கு அந்த மனிதனுடைய மூளே கொஞ்சம் 'லூஸா'க இருக்குமோ என்ற சந்தேகம் வந்தது. அப்படியாளுல் பெரிய சங்கடம்தான் என்று தோன்றி விட்டது. பரிதாபமாக அவனேயே பார்த்துக்கொண்டு நின்ருன்.

"வீட்டைவிட்டு ஓடிட்டா-ஹைங்-உன்னே ஒருத்தராலும் **கண்**டு பிடிக்கவே முடியாதுன்னு நினேப்பா உனக்கு? ஹைங்?"

மணியும் தன்னேயறியாமல், "ஹைங்!" என்ருன். பயத்தின் கோளாறுதான் அது.

உடனே அந்த முரடனுடைய மீசை துடிக்க ஆரம்பித்துவிட்டது. பிடித்த பிடியை ஓர் உலுக்கு உலுக்கி, "நட பின்னுலேயே! உம்! பரிகாசமா காட்டறே? ஹைங்!" என்று சொல்லிக்கொண்டே அவன் மணியை இழுத்துச்சென்ருன்.

மணி மனசுக்குள் வேண்டாத தெய்வங்களேயெல்லாம் வேண்டிக்கொண்டே போளுன். ஊற்று, மண்டபம், சிமெண்ட் பெஞ்சு, குரோட்டன்ஸ் செடிகள் எல்லாவற்றையும் கடந்து அவர்கள் வெளியில் வந்தார்கள். பஸ் நிற்குமிடத்தில் அதிகக் கும்பல் இல்லே. தியாகராய நகரிலிருந்து பல இடங்களுக்கும் போகும் பஸ்கள் ஒன்றன்பின் ஒன்ருக வந்து போய்க்கொண்டே இருந்தன. எல்லாப் பஸ்களும் கூட்டமும் நெரிசலும் தாங்க முடியாமலே வந்தன; போயின. அந்த முரட்டு மனிதனே எந்தப் பஸ்ஸிலும் ஏறுவதாகத் தெரியவில்லே. பஸ்ஸினுடைய எண்களேயெல்லாம் கூர்ந்து பார்த்துக்கொண்டே இருந்தான்.

கறுப்பாக ஆமைபோல ஒரு பஸ் கடகடவென்று ஊர்ந்து வந்துகொண்டிருந்தது. மேலே சரியான வெளிச்சம் இல்லே. அந்த முரடனுடைய பார்வைதான் பழுது என்று ஏற்கனவே மணிக்குத் தெரியுமே! அதளுல் அவன் உடனே மணியைப் பார்த்து, "டேய் தம்பி, முராரி! அந்தப் பஸ் நம்பர் என்ன, 9 தானுன்னிட்டுப் பாரு!" என்ருன்.

மணியும் பார்த்தான். ஆளுல் அவனுடைய கூரிய கண்களுக்கும் டிமிக்கி கொடுத்துவிட்டது அந்தச் சர்க்கார் பஸ். ஒரே இருட்டாகத்தான் தெரிந்தது. ஆளுல் அருகில் வரும்போது அது ஒன்பதாம் நம்பர் பஸ்ஸாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது.

"ஆமாம்; இதுதான்!" என்ருன் மணி.

"சரி; அப்ப இதிலே ஏறு!" என்று அந்த மனிதன் மணியுடன் பஸ்ஸில் ஏறலாளுன். மணியின் கண்களில் திடீரென்று ஏதோ பட்டுவிட்டது. அதோ நடுவில் தலேயை நீட்டிக்கொண்டு ஓரமாய் உட்கார்ந்திருப்பது யார்? 'அட, அந்தத் திருட்டுக் கங்கன் அல்லவா?'—ஒரு கணம்தான். அதற்குள் முரடன் கை அவனே வேகமாகப் பிடித்து இழுத்துக்கொண்டு பஸ்ஸை நெருங்கியது.

"ஒரு ஆள்தான்..அதுக்கு மேலே இடமில்லே!" என்று தடுத்து நிறுத்திளுன் கண்டக்டர்.

"சின்னப் பையன்தான், அப்பா!" என்ருன் முரட்டு மனிதன்.

"யாராயிருந்தாலும் சரிதான்; இடமில்லேன்னு இடமில்லேதான்! போ—ரைட்!" என்று அந்தக் கண்டக்டர் விசிலே எடுத்துக் காது செவிடுபட ஊதிளுன். அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பஸ்ஸி

லிருந்த குழந்தை ஒன்று 'ஹோ' என்று அலற ஆரம்பித்தது.

ஆமை பஸ் அட்டகாசத்துடன் புறப்பட்டுவிட்டது. மணியும் அந்த முரடனும் கீழேயே நின்றார்கள். மணியின் மனசு என்னவெல்லாமோ எண்ணியது. அவன் மட்டுமா கங்கனைக் கவனித்தான்! கங்கனும் அவனைக் கவனித்துவிட்டான். அந்தப் பஸ்ஸில் ஏறியிருந்தால் இரண்டு பேருக்குள்ளும் என்ன நடந்திருக்கும்! அதையே எண்ணிக் கொண்டு மணி பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

''சரி, இனிமே பஸ்ஸுக்கு நின்னு உபயோகமில்லை. மெதுவா நடந்தே போவ வேண்டியதுதான்!'' என்று முரடன் மணியைப் பிடித்தவாறே நடக்கத் தொடங்கினான். மணிக்கு இப்போது கொஞ்சம் தைரியம் வந்திருந்தது.

''ஆமாம், இப்ப எங்கே என்னைப் புடிச்சி இழுத்துக்கொண்டு போறே?'' என்றான் மணி.

''வந்தாத் தன்னாலே தெரியுது'' என்றான் அந்த முரடன்.

''நான் வரமாட்டேன். எனக்கு ஒரு வீட்டுக்குப் போகணும்.''

''வர—மாட்டியா? ஹைங்! வரமாட்டியா நீ? உன்னை யாரு விட்டாங்க, வராமே போக?''

''அப்படியானா நான் சத்தம் போட்டுக் கூவுவேன். சின்னப் பையன்னு மிரட்டிறியோ நீ?''

''எங்கே சத்தம் போட்டுப்பாரு, பார்ப்போம்? இந்த ஸி. ஐ. டி. குப்புசாமியை யாரு, என்னா செஞ்சிட முடியும்?''

மணி இந்த வார்த்தைகளைக் கேட்டதும் வாயடைத்துப் போனான். வந்த தைரியமெல்லாம் பஞ்சாய்ப் பறந்துவிட்டது.

"ஐயா ஐயா..என்னை விட்டு டுங்க ஐயா..நான் ஒரு தப்பும் பண்ணலே ஐயா!" என்று கெஞ்சி அழத் தொடங்கினான்.

"அழுதியோ கொண்டுபோய், போலீஸ் ஸ்டேஷன் லாக் அப்பிலே போட்டுடுவேன். மரியாதையா வந்தா உங்க அப்பாருகிட்டே கொண்டுபோய் விடுவேன்!"

"எங்கப்பாவா? எங்க அப்பா தான் இங்கே இல்லியே!"

"வந்து பாரேன், வந்திருக்காரா இல்லையான்னிட்டு!"

"எங்க அப்பாவா வந்திருக் கார்?"

"உங்க அப்பாவேதான்! எங்க இன்ஸ்பெக்டர் வீட்டிலேதான் தங்கியிருக்காரு இப்ப!"

"எங்க அப்பாதான்னு உங்க ளுக்கு எப்படித் தெரியும்?

"ஹைங்-? இது பெரிய சாமார்த் தியம் பாரு! இந்தச் சர்வீஸுலே இருபத்தஞ்சு வருஷம் இருந்த இந்தக் குப்புசாமிக்கு இந்த நொள்ளிக்கா விஷயம் பிரமாதம் பாரு! நட தம்பி மரியாதையா!"

மணியின் தலை கிர்கிர் என்று சுற்றியது. எதையும் தெளிவாக யோசனை செய்ய முடியவில்லை. வெறும் யந்திரம்போல அவன் பின்னால் நடந்து போய்க்கொண் டிருந்தான். சுமார் இரண்டுமைல் தூரம்போய் ஜன நடமாட்டமே இல்லாத சாலைகளிலும் தெருக் களிலுமாக நடந்தார்கள். மணிக் குக் கால்கள் வலியாய் வலித்தன. வேதனையினால் அழுகை அழுகை யாக வந்தது. சிங்கம் மூச்சுவிடு வது போல அந்த முரடன் பிடித்த பிடி விடாமல் நடந்து போய்க் கொண்டே யிருந்தான்.

கடைசியில் ஒரு பெரிய திடலாக இருந்த மைதானத்தை நெருங் கினார்கள். அதன் ஒரு புறத்தில் ஒற்றைச் சாரி வீடுகள் இருந்தன. அந்த மைதானம் இருடைர்ந்து கிடந்தது. மணிக்கு அந்த இருளுக் குள் எங்கேயாவது மறைந்து ஒளிந்துகொண்டுவிட வேண்டும் போல் இருந்தது. அதே சமயத்தில் அந்த இருளைப் பார்க்கப் பயங்கர மாகவும் இருந்தது.

அதற்குள் அந்த மனிதன் ஒரு வீட்டின் கேட்டைத் திறந்து கொண்டு இருண்டு கிடந்த வாசற் புறமாக அவனை அழைத்துச் சென்றான். மணிக்குத் திக் திக் கென்றது. எங்கேயாவது கொண்டு போய் மென்னியைப் பிடித்து விடப் போகிறானே என்று திகில் வந்துவிட்டது. அதற்கு ஏற்றாற் போல அந்த வீட்டில் மனிதர்கள் வசிப்பதாகவே தெரியவில்லை. குப்புசாமி கம்பிக் கதவருகில் போய் விரல்களை உள்ளே விட்டு, அதன் கொக்கியைத் தள்ளிக் கத வைத் திறந்தான். அக்கம் பக்கத் திலாவது மனிதர்கள் வசிக்கிறார் களா என்று பார்ப்பதற்குள் மணியை அவன் உள்ளே இழுத்துப் போய்விட்டான்.

"ஊ ஊ.." என்று உளறியடித் துக்கொண்டு மணி பின்தொடர வேண்டியிருந்தது. வாயை விட்டுக் கத்துவோம் என்றால் தொண்டை யில் ஏதோ ஒன்று கெட்டியாக அடைத்துக்கொண் டிருந்தது.

'இவன் யாரோ பிள்ளை பிடிக் கிறவன்தான்; சந்தேகமேயில்லை!' என்று மணிக்குப் பட்டுவிட்டது.

அவன் தன் சட்டைப்பையி லிருந்த சாவியை எடுத்து, ஓர் ஓரத்தில் பூட்டப்பட்டிருந்த அறைக் கதவைத் திறந்தான். உள்ளே ஒரே அந்தகாரம், ஏதோ ஒரு புழுக்கமான வெப்ப நெடி.

"டேய் முராரி! இங்கேயே கொஞ்ச நேரம் இரு. நான் போய் தீப்பெட்டி வாங்கிக்கிட்டு இதோ வந்திடறேன்" என்று மணியை உள்ளே பிடித்துத் தள்ளி னான் அவன்.

"அப்பாவ்.." என்று உள்ளே பல்டியடித்துக்கொண்டு போய் விழுந்தான் மணி.

'டக்'கென்று அந்த அறைக் கதவைக் கொக்கி போடும் ஓசை கேட்டது. பூட்டை மாட்டி, சாவி யால் பூட்டும் சத்தமும் தொடர்ந்து வந்தது. (தொடரும்)

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4;
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN;

கண்ணன்

அதிருஷ்ட எண்கள்

இதோ பக்கத்தில் ஓர் எண் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த எண் அதிருஷ்ட எண்ணுக இருக்கலாம். எல்லாக் கண்ணன் இதழ்களுக்கும் இதேமாதிரி ஒவ்வோர் எண் உண்டு. அவற்றில் பத்து எண்கள் குலுக்கி எடுக்கப்படும். அந்தப் பத்தும் அதிருஷ்ட எண்கள். அந்த அதிருஷ்ட எண்ணுள்ள இதழ் வைத்திருப்பவர்களுக்குப் பரிசுப் பணம் உண்டு.

பரிசு விவரம்

முதல் பரிசு	ரூ. 15/-
இரண்டாம் பரிசு	ரூ. 10/-
மூன்ரும் பரிசு (மூன்று பேர்களுக்குத் தலா)	ரூ. 5/- வீதம்
நாலாம் பரிசு (ஐந்து பேர்களுக்குத் தலா)	ரூ. 2/- வீதம்
மொத்தம் பத்துப் பரிசுகளுக்கு	ரூ. 50/-

உங்கள் கண்ணன் இதழைப் பத்திரமாக வைத்திருங்கள்

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர்

கண்ணன் வெளியீடுகள்

கலைமகள் காரியாலயத்திலிருந்து வெளி வருபவை கண்ணன் வெளியீடுகள். ஐந்து முதல் பதினறு வயதுள்ள குழந்தைகளுக்கு ஏற்றவை. நல்ல காகிதம்; அழகான படங்கள்; பெரிய எழுத்துக்கள். குறைந்த விலையில் சிறந்து விளங்குபவை கண்ணன் வெளியீடுகள்தான். இது வரையில் 21 புத்தகங்கள் வெளிவந்துள்ளன. இன்னும் பல வரவிருக்கின்றன.

இப்போது கைவசம் உள்ளவை:

1. அசட்டுப் பிச்சு	ரூ.	1
2. பவழவல்லி	அணு	12
3. ஜக்கு	,,	8
4. விஞ்ஞானம் பேசுகிருர்	,,	8
5. சமர்த்து மைனு	,,	8
6. மின்னல் அரக்கன்	,,	8
7. ஏரிக்கரை மாளிகை	,,	8
8. மாஸ்டர் பாலகுமார்		4
9. தூங்கும் அழகி	,,	4
10. நீச்சல் பழக்கம்	,,	3
11. கோழி விதைத்த நெல்		8
12. பார்வதியும், ஏழு சித்திரக் குள்ளர்களும்		3

பாக்கிப் புத்தகங்கள் விரைவில் கிடைக்கும்.

* ஸெட்டாக வாங்கினல் ரூ. 4/- தான்

தபால் செலவு தனி. விரிவான விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்

கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு

Regd. No. M. 5542



எழுதும் புதிய தொடர்கதை

கண்ணன்

இந்த இதழில் ஆரம்பமாகிறது

அவனோடு படிக்கும் நண்பர்களுக்கு அவன் குண்டுச் சீமாவாக இருக்கலாம். ஆனால் அப்படி யாராவது அவன் பாட்டிக்கு எதிரே வந்து கூப்பிடலாமா? கூப்பிடத்தான் முடியுமா? மேலே உள்ள காட்சி குண்டுச் சீமா எண்ணெய் தேய்த்துக்கொள்ளும் காட்சி. எண்ணெய்க் கிண்ணத்துடன் பாட்டி கெஞ்ச, அம்மா பிடித்துத் தள்ள, தாத்தா காசு கொடுத்து ஆசைகாட்ட, அப்பா அதட்ட, சீமா ரகளை பண்ணுகிறான். நமக்கோ சிரித்து வயிறு அறுந்து போகிறது. ஹாஸ்யம் நிறைந்த கதை.

உங்கள் இதழுக்கு இன்றே சொல்லிவிடுங்கள்

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.